பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 30 சனிக்கிழமை (12.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :78

# இன்று ஹர்த்தால்!

யாழ்ப்பாணம்,பெப்.12

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் உட்பட 4 புலிகள் கொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து இன்று யாழ். குடாநாட்டில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் உட்பட குடாநாட்டிலுள்ள பொது அமைப்புகள் இணைந்து இந்தக் ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்திருக்கின்றன.

இன்றைய ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் கிழக்கில் இடம்பெற்றிருக்கும் படுகொலைச் சம்பவத்திற்கு எதிர்ப்பையும், கண்டனத்தையும் வெளிப்படுத்துமாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் கேட்டிருக்கிறது.

வர்த்தகர்கள் அனைவரும் இன்று முழு நாளும் தமது வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைக்குமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது. வர்த்தக நிலையங்களில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை மற்றும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கௌசல்யனின் இடத்துக்கு அரசியல் பொறுப்பாளராக மார்ஷல் நியமனம்

கொழும்பு,பெப்.12

விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை புதிய அரசியல்துறைப் பொறுப்பாளராக மார்ஷல் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் தாண்டியடியில் லெப்டினன்ட் கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளினதும் இறுதி அஞ்சலி நிகழ்வை அடுத்துப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. (16ஆம் பக்கம் பார்க்க)

# விவேகத்துடனும் பொறுப்புடனும் புலிகள் செயற்படுகின்றனர் என அரசு புகழாரம்!

## கௌசல்யன் உட்படப் போராளிகள் படுகொலை காட்டுமிராண்டித்தனமானது என்றும் விசனம்

கொழும்பு,பெப்ரவரி 12

**தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரநேரு மற்றும் புலிப் போராளிகள் மூவர் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டமை காட்டுமிராண்டித்தனமானதும், மிலேச்சத்தனமானதுமான ஒரு செயல். இது ஓர் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் என்று அரசு வன்மையாகக் கண்டித்துள்ளது. இந்த விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விவேகத்துடனும், நிதானத்துடனும், மிகவும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொண்டது என அமைச்சர் மங்கள சமரவீர தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பாராட்டும் தெரிவித்தார்.**

நேற்று அரச தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை, அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறைகள் அமைச்சருமான மங்கள சமரவீர நேற்றுச் செய்தியாளர்களுக்கு அறிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே மங்கள் சமரவீர இப்படுகொலைகளை வன்மையாகக் கண்டித்தார்.

அரசுத் தரப்பும், புலிகள் தரப்பும் யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பதில் மிகவும் உறுதியாகவே இருக்கின்றன. இதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை.

ஆனால், யுத்தநிறுத்த உடன்படிக்கையை முறியடிக்கவேண்டும் - அதன்மூலம் மீண்டும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரநேருவின் இறுதிக்கிரியைகள் இன்று

காரைதீவு,பெப்.12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், நாட்டுப்பற்றாளருமான அரியநாயகம் சந்திரநேருவின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் திருக்கோயிலில் நடைபெறவுள்ளன.

கொழும்பிலிருந்து கடந்த வியாழனன்று மட்டக்களப்புக்குக் கொண்டுவரப்பட்ட அவரது பூதவுடல் பாண்டிருப்பு, கல்முனை, காரைதீவு, அக்கரைப்பற்று போன்ற பகுதிகளில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின்னர் பிறந்த ஊரான திருக்கோயிலுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

பூதவுடலுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, க.பத்மநாதன், த.கனகசபை, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்படப் பல முக்கிய பிரமுகர்களும் கூடச்சென்றனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பினர் நேற்று அகாஷியுடன் சந்திப்பு

ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷியைத் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

கூட்டமைப்பு எம்.பிக்கள் சார்பில் ஆர்.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்திற்கு முன்னரும் பின்னரும் இருந்த வடக்கு - கிழக்கு நிலைமைகள் தொடர்பாக கூட்டமைப்பு எம்.பிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

### வெலிகந்த தாக்குதல் மற்றும் நிவாரணப் பாரபட்சத்தை எதிர்த்து

# கண்டனப் பேரணிகளை நடத்த தொழிற் சங்கங்கள் ஆயத்தம்!

### செவ்வாயன்று கூட்டுறவாளர்கள் முதல் பேரணி

யாழ்ப்பாணம்,பெப்.12

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு மற்றும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மூவர் படுகொலை செய்யப்பட்ட கொடூர செயலைக் கண்டித்தும் -

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கு அரசின் ஒதுக்கீடுகள் வழங்கப்படாததற்கு ஆட்சேபம் தெரிவித்தும் - குடாநாட்டில் தொழிற் சங்கங்கள் கண்டனப் பேரணிகளை நடத்தவுள்ளன.

நேற்று மாலை யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் செவ்வாயன்று மாபெரும் கண்டனப் பேரணி!

கிளிநொச்சி,பெப்.12

புனாணையில் விடுதலைப் புலிகளின் மட்டு.- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் மூன்று போராளிகளும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்துக் கிளிநொச்சியில் எதிர்வரும் 15ஆம் திகதி மாபெரும் கண்டனப் பேரணி நடைபெறவிருக்கின்றது.

அன்று காலை கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலில் இருந்து பேரணியை ஆரம்பித்து கண்காணிப்புக் குழு அலுவலகம், அரச செயலகம் ஆகியன வரை நடத்துவது என்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸாரால் இளைஞர் சித்திரவதை மன்னாரில் நேற்றுப் பெரும் களேபரம்

மன்னார்,பெப்.12

மன்னாரிலிருந்து 4 மைல் தொலைவிலுள்ள தாழ்வுபாடு என்ற இடத்தில் நேற்றுக் காலை தமிழ் இளைஞர் ஒருவர் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரால் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து அங்கு பெரும் களேபரம் மூண்டது.

ஆர்ப்பாட்டம் மற்றும் கல்வீச்சில் ஈடுபட்ட பொதுமக்களைக் கலைப்பதற்காக பொலீஸார் குண்டாந்தடியடிப் பிரயோகம் செய்தனர்; கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் வீசினர். அப்பிரதேசத்தில் தொடர்ந்தும் பெரும் பதற்றம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன்–அகாஷி சந்திப்பு இன்று கொக்கட்டிச்சோலையில்!

ஏறாவூர்,பெப்.12

ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷிக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான உயர் மட்ட சந்திப்பொன்று இன்று சனிக்கிழமை காலை 11 மணியளவில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி தற்போது

(16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்றுப் பரவலாக கண்டனப் பேரணிகள் நடந்தன

விசுவமடு,பெப்.12

புனாணையில் கடந்த திங்கட்கிழமை படுகொலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் 3 போராளிகளினதும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேருவினதும் நினைவுநாள் நிகழ்வும் கண்டனப் பேரணிகளும் நேற்று வன்னியில் இடம்பெற்றன.

(16ஆம் பக்கம் பார்க்க)



லெப். கேணல் கௌசல்யன் உட்பட 5 மாவீரர்களின் அஞ்சலி நிகழ்வு நேற்று வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவதை முதலாவது படத்திலும் கௌல்சயனின் திருவுருவப் படத்திற்கு இரு மாவீரர்களின் தந்தையாரான கந்தசாமி ஈகச்சுடரேற்றுவதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள் : தி.சிவரூபன், வட்டக்கச்சி செய்தியாளர்.)*

# புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய தொலைத்தொடர்பு வலைப்பின்னல்

## யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் திங்களன்று கோபுரங்கள் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

வெளியிடங்களுக்கான தொலைபேசி அழைப்புக்களைப் பெற்றுக்கொள்வதில் இருந்து வந்த நெருக்கடி நிலையைச் சீராக்கும் நோக்குடன் புதிய தொழில்நுட்பமுறை ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வருகின்றது.

கிளிநொச்சி ஊடான 'புதிய மடுக்கந்தை-யாழ்.STM-1' என்ற புதிய இணைப்பு திங்கட்கிழமை முதல் செயற்பட இருப்பதைத் தொடர்ந்தே தொலைபேசி சேவைகளில் நிலவிவந்த நெருக்கடி நிலை நீங்குகிறது.

புதிய எஸ்.ரி.எம். இணைப்பைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்க ஸ்ரீலங்கா ரெலிக்கொம் தலைவர் அனில் ஒபெசேகர, பிரதான நிறைவேற்று அதிகாரி சுகி அனன் ஆகியோர் வடக்கே வருகின்றனர். இவர்கள் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு புதிய இணைப்புச் சேவையை ஆரம்பித்து வைப்பார்கள்.

இதுவரை மன்னார் ஊடாக இணைக்கப்பட்டிருந்த வடபகுதி தொலைத்தொடர்பு வலைப்பின்னல் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கிளிநொச்சி யோகபுரம் ஊடாகவும் இணைக்கப்படுகின்றது.

இதன்மூலம் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் தொலைத்தொடர்பு சேவைத் தரம் உயர்வதுடன் மேலும் ஐந்நூறு பேருக்கு புதிதாக இணைப்புகளை வழங்கவும் வாய்ப்புக் கிட்டும் என ரெலிக்கொம் பிராந்திய முகாமையாளர் என்.சரவணபவன் தெரிவித்தார். இந்தப் புதிய தொழில்நுட்பம் நடைமுறைக்கு வந்தபின், குடாநாட்டில் புதிய பரிவர்த்தனை நிலையத்தை அமைக்கக்கூடிய சாத்தியம் உருவாகும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ஐ-3)

## கிராம மகளிர் குழுக்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.12

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் கைதடி, சில்லாலை, விளான் கிராம மகளிர் குழுக்களுக்கான முழு நாள் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஊக்குவிப்பாளர் ஆ.ஆன்கலிஸ்ரா, தி. றொசாந்தினி ஆகியோரின் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கில் 'வன்முறையற்ற முறையில் தொடர்பாடலை வளர்ப்பதன் மூலம் சமூக மட்டத்தில் சமாதானத்தைக் கட்டியெழுப்பு' என்னும் தலைப்பில் வண.பிதா ஈனொக் புனிதராஜ் கருத்துக்களை வழங்குவார். (8-190-202)

# கோண்டாவிலில் திருடியவர் கொழும்பில் வைத்துப் பிடிபட்டார்

கோண்டாவில்,பெப்.12

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் 27 பவுண் நகைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றைத் திருடிய திருடன் கொழும்பில் பிடிபட்டான்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:- கடந்த வாரம் குறித்த பகுதியில் நள்ளிரவு வேளையில் வீட்டுக்குள் புகுந்து பொருள்களைத திருடிய திருடன் கொழும்புக்குச் சென்று தலைமறைவாயிருந்தான்.

இதனை அறிந்துகொண்ட நகைகளைப் பறிகொடுத்தவர் கொழும்புக்குச் சென்று திருடனிடம் தந்திரமாகப் பேசி அவனை அழைத்து வந்து வவுனியா அரசியல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா அரசியல்துறையினர் திருட்டுப் பற்றிய தகவல்களைப் பெற்றனர்.

இதேவேளை -

அந்தத் திருடன் பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. (10-49)

# புற்றுநோயாளர் காப்பகத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது

வலி.வடக்கு,பெப்.12

வடக்கு - கிழக்கில் உள்ள புற்றுநோயாளர்களைப் பராமரிப்பதற்கான காப்பகம் ஒன்றை அமைப்பதற்கு மருதனார்மடத்தில் கட்டடத்துக்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது.

மருதனார்மடத்தில் சபாபதி வீதியில் இக்கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

கட்டடத்துக்கான சங்கினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் நட்டார். லண்டனில் இருந்து வருகைதந்த கல்வியாளர் எஸ்.தர்மகுலசிங்கம் அடிக்கல்லை நட்டார்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், வங்கி அதிகாரிகள், வர்த்தகர்கள், வைத்தியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(3-86-152)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க கூட்டம் ஒத்திவைப்பு

நாளை நடைபெறவிருந்த யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று சங்கத்தின் உதவிச் செயலாளர் தெரிவித்தார்

இக்கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

*(முன்னர் வந்த செய்தி 8ஆம் பக்கத்தில்)*

(ஐ-3)

## இலவச கணனிப் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் உயர் கல்வி மாணவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கென அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள இவ்வகுப்புகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் விண்ணப்பப் படிவங்களை பேரவை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு பேரவைப் பொறுப்பாளர் ந. கண்ணன் கேட்டுள்ளார். (8-20)

## உடுவில் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம்

தாவடி,பெப்.12

உடுவில் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நிர்வாக விடயங்கள், அறிவுறுத்தல்கள் என்பன கலந்துரையாடப்படவுள்ளதால் தேவையான இலவச பாடநூல்கள் பற்றிய விவரம், ஆசிரியர் சுயவிவரம், 2004ஆம் ஆண்டின் வ.சே.க.குணநல உள்ளீட்டு இறுதியாண்டறிக்கை என்பவற்றைச் சகலரும் கொண்டு வருமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (8-149-202)

# மீண்டும் யுத்தம் வருகிறதோ இல்லையோ படையினர் எப்போதும் தயார் நிலையில்!

## இராணுவத் தளபதி கோட்டேகொட கூறுகிறார்

வவுனியா,பெப்.12

மீண்டும் ஒரு யுத்தம் வருமா வராதா என்று சொல்ல முடியாது. ஆனாலும் இராணுவத்தினர் எப்போதும் பயிற்சியில் ஈடுபட்டுத் தயாராக இருக்கின்றார்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்காவின் இராணுவத் தளபதி சாந்த கோட்டேகொட.

வன்னிப் பிராந்தியத்தின் பாதுகாப்பு நிலைவரங்களை ஆராய்வதற்காக நேற்று வவுனியாவுக்கு வந்த அவர் வன்னி இராணுவ தலைமையகமான ஜோசப் இராணுவ முகாமில் விசேட கலந்துரையாடல் ஒன்றினை நடத்தினார்.

இதன்பின்னர் கொக்குவெளி பிரதேசத்தில் இராணுவத்தினருக்கான பயிற்சி முகாம் ஒன்றினைத் திறந்து வைத்து இராணுவ மரியாதையினை ஏற்றுக்கொண்டார்.

அங்கு இராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள் மத்தியில் உரையாற்றுகின்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான சூழ்நிலை நிலைத்து இருக்குமா? அல்லது போர் ஒன்று ஏற்படுமா? என்பது இப்போது கூறமுடியாது. இராணுவத்தினர் போர் நிறுத்த உடன்படிக்கையினை சரியான முறையில் கடைப்பிடித்து வருகின்றனர். தொடர்ந்தும் இவ்வாறு கடைப்பிடிக்கவேண்டும்.

கடந்த கால யுத்தத்தின்போதும் 'ஜயசிகுறு' இராணுவ நடவடிக்கையின்போதும் இராணுவத்தினருக்கு அதிக இழப்பு ஏற்படக் காரணம் போதிய பயிற்சி இன்மை. எனது எதிர்வரும் காலத்தில் அவ்வாறு நடைபெறக் கூடாது.

இதன் பின்னர் செட்டிக்குளம் பகுதிக்கும் சென்று பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக அவர் ஆராய்ந்தார்.

யுத்தம் ஒன்று வந்துவிட்டால் அதற்குப் பிறகு தயார்ப்படுத்தல்களில் ஈடுபடமுடியாது. எனவே, யுத்தம் வருகிறதோ இல்லையோ படையினர் போதிய பயிற்சிகளைப் பெற்று எப்போதும் தயாராகவே இருக்கின்றனர். யுத்தம் வந்தாலும் அதனை எதிர்கொள்ளும் வலிமை அவர்களுக்கு உண்டு - என்றார் கோட்டேகொட.

சாந்த கோட்டேகொடவின் விஜயம் தொடர்பாக செய்தி சேகரிப்புக்கு தமிழ் பத்திரிகையாளர் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

கொக்குவெளிப் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைமையினைக் கருத்தில்கொண்டே இந்த அனுமதி மறுக்கப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். சாந்த கோட்டேகொடவின் வவுனியா விஜயம் காரணமாக வவுனியா நகர் பகுதியும் அவர் பிரயாணம் செய்யும் வீதிகளும் பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-164)

# கொழும்பில் அரசியல் தலைவர்களுடன் நிவாரணப் பணி குறித்து அகாஷி பேச்சு

கொழும்பு,பெப்.12

நான்கு நாள் பயணமாக இலங்கை வந்துள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி கொழும்பில் அரசுத் தலைவர்களையும் அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் தொடர்பாகவும் சமாதான முயற்சிகள் குறித்தும் பேச்சு நடத்தி வருகின்றனர்.

நேற்றுமாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து அவர் பேசினார். இந்தச் சந்திப்பில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின் மீள்கட்டுமானப் பணிகள் தொடர்பாகவும் அவற்றுக்கு ஜப்பானிய அரசின் உதவிகள் குறித்தும் முக்கியமாக ஆராயப்பட்டன என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக நேற்றுக்காலை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்து இன்றை நிலை பற்றிக் கலந்துரையாடினார் அகாஷி.

இந்தச் சந்திப்பின்போது ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எல்லாத் தரப்பினருக்கும் - குறிப்பாக பாரிய அழிவுகளைச் சந்தித்த முஸ்லிம் சமூகத்திற்கும் உதவிகள் நீதியானமுறையில் சென்று சேர்வதை உறுதிப்படுத்துவதில் ஜப்பான் திடமாக இருக்கின்றது என்று அகாஷி கூறினார் என ஹக்கீம் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள ஹக்கீமின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

## சுவாசக் கலைப் பயிற்சி பறாளையில் நடக்கிறது

தொல்புரம்,பெப்.12

சுவாமி ஸ்ரீ ரவிசங்கர்ஜியின் சுவாசக் கலைப் பயிற்சி வகுப்புக்கள் நேற்றுமுதல் பறாளாய் சிவசுப்பிரமணியர் தேவஸ்தான அன்னதான சபை மண்டபத்தில நடைபெறுகின்றன.

மூன்று நாள் நடைபெறவுள்ள பயிற்சி வகுப்புக்களில் இருதயப் பிரச்சினைகள், நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், ஆஸ்துமா, தலைவலி, போன்றவற்றைக் குணமாக்குதல் தொடர்பாகவும் போதைப் பழக்கவழக்கங்களை விலக்குதல் தொடர்பாகவும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. (202-ரி)


# அணுவாயுதம் தயாரித்ததாக வடகொரியா ஒப்புதல்!

## நாட்டின் பாதுகாப்புக் கருதியே இம்முயற்சி என்றும் அறிவிப்பு

டோக்கியோ,பெப்.12

தற்பாதுகாப்புக்காக அணு ஆயுதங்களைத் தயாரித்திருப்பதாக வடகொரியா ஒப்புக்கொண்டுள்ளது.

தாம் அணு ஆயுதங்களைத் தயாரித்திருப்பதாகவும்-


அணுத் தொழிற்சாலையொன்றின் பகுதி இது....

நாட்டின் தற்பாதுகாப்புக் கருதியே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் - வடகொரியா அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வடகொரியா வெளிநாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எங்களை - எமது நாட்டை- தனிமைப்படுத்த அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகளிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாம்- வடகொரியா-அணு ஆயுதங்களைத் தயாரித்தது.

இதுதொடர்பான பேச்சுக்களில் கலந்துகொள்வதில்லை என்றும் தீர்மானித்து, அவை (பேச்சுக்களை) கைவிடப்பட்டுள்ளது.

அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் வடகொரியா கையெழுத்திடுவதில்லை என்று ஏற்கனவே நாம் முடிவுசெய்துவிட்டோம்.

- இவ்வாறு அதில் உள்ளது.

வடகொரியா அணு ஆயுதம் தயாரிக்க முயற்சி செய்துவருவதாகவும் அங்கு அணு ஆயுதங்கள் இருக்கலாம் என்றும் -

அமெரிக்கா குற்றஞ்சாட்டி வந்தது.

இதை முன்னதாக மறுத்த வடகொரியா, அணு ஆயுதம் தயாரிக்க முயற்சி செய்துவருகிறோம் என்று மட்டும் கூறியது.

இந்த முயற்சிகளைக் கைவிடவேண்டும் எனவும் -

அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் வடகொரியா கையெழுத்திடவேண்டும் எனவும் -

அமெரிக்கா மேலும் வலியுறுத்தி வந்தது.

இது தொடர்பான பேச்சுக்களையும் இரு நாடுகள் நடத்திவந்தன. அமெரிக்கா, தென் கொரியா, சீனா, ஜப்பான் உட்பட ஆறு நாடுகள் இப்பேச்சுக்களில் கலந்துகொண்டன.

இப்பேச்சுக்கள் இடையில் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சிகளை கைவிடவேண்டுமானால், அமெரிக்கா எமது நாட்டுக்கு நிதியுதவி செய்யவேண்டும் என்று வடகொரியா கேட்டுக்கொண்டது.

ஆனால், இந்த நிபந்தனையை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிலையிலே, தம்மிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக - பரப்பரப்பான தகவலை வடகொரியா வெளியிட்டிருக்கிறது. (க-8)

## நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் சிறையைத் தாக்கி 150 கைதிகளை விடுவிப்பு

காத்மண்டு,பெப்.12

நேபாளத்தில் சிறைச்சாலை ஒன்றைத் தாக்கிய மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அங்கிருந்த 150 கைதிகளை விடுவித்தனர்.

நேபாளத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ள தங்கர்கி மாவட்டத்திலேயே இச்சம்பவம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 4 பொலீஸார் கொல்லப்பட்டனர்; மேலும் 4 பேர் காயமடைந்தனர்.

அந்தச் சிறையில் இருந்த 168 கைதிகளில் 3 பேர் தப்பிச் செல்லமுடியாத அளவிற்கு மிகவும் மோசமாக சுகவீனமுற்றிருந்தனர் என்றும் -

மேலும், 15 பேர் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் - அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீவிரவாதி ஒருவருடையது என நம்பப்படும் - அடையாளம் காணப்படாத - ஒரு சடலம் சிறைச்சாலைக்கருகில் இருந்தது என்றும் அதிகாரிகள் கூறினர்.

சுமார் மூவாயிரம் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டனர் எனப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க-8)

## காதலி கமீலாவை மணக்கிறார் பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ்

லண்டன்,பெப்.12

தனது காதலி கமீலாவை மணக்கிறார் பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் இத்தகவலை அவரது அலுவலகம் அறிவித்துள்ளது.

இத்திருமண நிகழ்வு லண்டனுக்கு மேற்கே உள்ள விண்ட்ஸர் கோட்டையில் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

திருமணத்திற்குப் பிறகு கமீலா பார்க்கர் பொலிஸிக்கு இளவரசர் சாள்ஸின் முதல் மனைவியான மறைந்த டயானாவிற்கு வழங்கப்பட்ட 'வேல்ஸ் இளவரசி' என்ற பட்டம் வழங்கப்படாது. ஆனால், அவர் 'கோர்ன்வால்' சீமாட்டி என்று அழைக்கப்படுவார்.

இளவரசர் சாள்ஸ"க்கும் கமீலாவுக்கும் இடையே நீண்டகாலமாக உறவு இருந்துவந்தது.

இளவரசர் சாள்ஸ் திருமணம் செய்யவுள்ள கமீலா ஏற்கனவே விவாகரத்துப் பெற்றவர். அவரது முன்னாள் கணவர் இன்னமும் உயிருடன் இருக்கிறார்.

சாள்ஸ்- கமீலா திருமணம் முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

இங்கிலாந்தைப் பொறுத்தவரை யார் அரசரோ அவரே நாட்டிலுள்ள தேவாலயங்களுடைய பதவி வழித்தலைவராக இருப்பார். அவர்கள் விவாகரத்துப் பெற்றவர்களை மறுமணம் செய்து கொள்ளக்கூடாது இது மத நம்பிக்கை - கருத்து ஆகும்.

இவ்வாறிருக்க, தேவாலயத்தின் உயர் நிர்வாகப் பதவிக்கு வரும் சாள்ஸ் எவ்வாறு மறுமணம் செய்வது என்ற கேள்வி எழுந்துள்ளது.

எனினும், சாள்ஸ் - கமீலா திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று 'கான்டர்பெர்ரி' தலைமைப் பேராயர் ஜோர்ச் கெரே கருத்து வெளியிட்டுள்ளார். (க-8)

## சவூதியில் முதன்முறையாக நேற்றுமுன்தினம் தேர்தல்

ரியாத்,பெப்.12

சவூதி அரேபியாவில் பல்வேறு நெருக்கடி நிலை நிலைமைகளுக்குப் பிறகு ஜனநாயக முறைப்படி - முதன்முறையாக - நேற்றுமுன்தினம் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் ஆண்கள் மட்டுமே வாக்களித்தனர். பெண்கள் வாக்களிக்க மறுக்கப்பட்டிருந்தனர். இதனால் அவர்களிடையே கொந்தளிப்புத் தென்பட்டது.

முதல் கட்டமாகத் தலைநகர் ரியாத்தில் உள்ள ஆயிரத்து 800 இடங்களில் வாக்குப் பதிவு நடைபெற்றது. ரியாத்தில் 40 லட்சம் ஆண்கள் உள்ளனர். ஆனால் வாக்களித்தவர்கள் ஒரு லட்சத்து 49ஆயிரம் பேர் மட்டுமே என செய்திகள் தெரிவித்தன.

ஏனைய மாவட்டங்களில் இன்னும் இரண்டு மாதங்களில் தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உள்ளூராட்சிச் சபைக்கு என்ன அதிகாரங்கள் வழங்கப்படும் என்பது தெரியவில்லை ஒவ்வொரு சபையில் அரைவாசிப் பேரே இத்தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படுவர். ஏனைய பாதிப் பேர் ஆளுநர்களிலிருந்து தெரிவுசெய்யப்படுவர். (க-8)

## ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இந்தியா; அமெ.காங்கிரஸில் பிரேரணை சமர்ப்பிப்பு

வாஷிங்ரன்,பெப்.12

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்க ஆதரவு தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை அமெரிக்க நாடாளுமன்றக் குழுத் தலைவர் பிராங் பல்லோன் அமெரிக்கக் காங்கிரஸில் சமர்ப்பித்துள்ளார்.

இந்தியா வளர்ந்துவரும் பொருளாதார சக்தி ஆகும். எனவே, பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்கவேண்டும். இதில் அமெரிக்க நலனும் அடங்கியுள்ளது. எனவே, இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்குவது எமது பொறுப்பாகும் - என்று அவர் கூறினார்.

15 நாடுகள் உறுப்பினர்களாக உள்ள ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, சீனா, பிரான்ஸ் ஆகிய 5 நாடுகள் மட்டும் வீட்டோ ரத்து அதிகாரமுள்ள நிரந்தர உறுப்பினர்களாக இருக்கின்றன.

ஐ.நா. சபையைப் பலப்படுத்துவதற்காகப் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய ஐ.நா. திட்டமிட்டது. இத்திட்டம் பற்றி அறிவித்தபோதே இந்தியா தனக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தது.

இந்தியாவின் இந்தக் கோரிக்கையை ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஆதரித்தபோதிலும் அமெரிக்காவும் சீனாவும் மௌனம் சாதித்து வந்தன.

இந்நிலையிலேயே, அமெரிக்க ஜனநாயக் கட்சி உறுப்பினரான பிராங் பல்லோன இந்தப் பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டால் அது நாடாளுமன்றத்தின் உணர்வை மட்டுமே வெளிப்படுத்தும். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் நிர்வாகத்தை அது எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என பிராங் கூறினார்.

1942 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோது ஐ.நா.சபையில் 51 உறுப்பு நாடுகள் மட்டுமே இருந்தன. ஆனால், தற்போது 200 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் பாதுகாப்புச்சபை இல்லை எனவும் அவர் கூறினார். (க-8)

## நேபாளத்துக்கு அமெ.கண்டனம்

வாஷிங்ரன்,பெப்.12

நேபாள நாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள அரசியல் தலைவர்களைச் சந்திப்பதற்குத் தனது தூதருக்கு அனுமதி வழங்க மறுப்புத் தெரிவித்தமைக்கு அமெரிக்க அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

நேபாளத்தில் முன்னாள் பிரதமர் ஷேர் பகதூர் டுபா தலைமையிலான ஆட்சியை மன்னர் ஜியானேந்திரா அண்மையில் கலைத்தார். அதன் பின்னர், முன்னாள் பிரதமர் உட்படப் பல அரசியல் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களைச் சந்திப்பதற்கு அமெரிக்கத் தூதுவர் முயன்றபோதே அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

நேபாளம் தனது அரசியல் முடிவை மாற்றியமைத்து ஜனநாயகப் பாதைக்கு உடனடியாகத் திரும்பவேண்டும் என்று நேபாள அரசுக்கு அமெரிக்க அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறும் அமெரிக்கா கேட்டுள்ளது.

இதேவேளை -

கைதுசெய்யப்பட்டிருந்த முன்னாள் பிரதமர்களான கிருஷ்ண பிரசாந் பட்ராய் , லோகேந்திர பகதூர் சந்த் உட்பட 7 அரசியல் பிரமுகர்கள் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனால், பிரதான அரசியல் கட்சிகளான நேபாள காங்கிரஸ், ஐக்கிய கம்னியூஸ்ட் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் தொடர்ந்தும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(க-8)




### உலகம் முழுவதிலும்

## மூன்று லட்சம் சிறுவர்கள் படைகளில்; இலங்கையில் அந்நிலை இப்போதில்லை

நியூயோர்க்,பெப்.12

உலகம் முழுவதும் சுமார் 3லட்சம் சிறுவர்கள் படைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் உலகிலுள்ள 11 நாடுகளில் 42 ஆயுதக்குழுக்கள் சிறுவர்களை சிப்பாய்களாக இணைத்துக் கொண்டுள்ளன என்று ஐ.நா. செயலாளர் கோபி அனான் குறிப்பிட்டுள்ளார்.

போர்க்களத்தில் யுத்தம் செய்யும் சிறுவர்கள் பற்றிய அறிக்கை ஒன்றை ஐ.நா.சபை தயாரித்துள்ளது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு நாட்டினதும் அரசு அல்லது அரசு எதிர்ப்புக்குழு எதுவாயினும் யுத்தத்திற்கு சிறுவர்களைப் பயன்படுத்தக்கூடாது.

அவ்வாறு சிறுவர்களைப் பயன்படுத்தி யுத்தம் செய்தாலோ பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினாலோ இனிமேல் அந்த நாடுகள் அல்லது அமைப்புகளின் தலைவர்கள் வெளிநாடு செல்லக் கட்டுப்பாடு, ஆயுதத்தடை, இராணுவ உதவி துண்டிப்பு, நிதியை தாராளமாகச் செலவிடக் கட்டுப்பாடு போன்ற கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டும்.

மேலும், சிறுவர்களை ஊனப்படுத்துவது, கொலை செய்வது, இராணுவத்தில் சிறுவர்களை சேர்ப்பது, பாலியல் வன்கொடுமைக்குட்படுத்துவது, கடத்துவது, சிறுவர்களுக்குக் கிடைக்கவேண்டிய மனிதாபிமான உதவிகளை கிடைக்கவிடாது தடுப்பது மற்றும் வைத்தியசாலைகள், பாடசாலைகள் என்பவற்றை தாக்குவது போன்ற செயற்பாடுகளில் அரசோ புரட்சிக்குழுக்களோ ஈடுபட்டால் அதனைத் தடுப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

உலகில் கொங்கோ, மியான்மர், உகண்டா போன்ற நாடுகளில் அரசே சிறுவர்களை இராணுவத்தில் சேர்த்துள்ளது.

ஆனால், இலங்கை, லைபீரியா, அங்கோலா போன்ற நாடுகளில் கடந்த ஆண்டுவரை சிறுவர்கள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டனர் தற்போது அந்நிலை காணப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், யுத்தங்களில் ஈடுபடுத்தப்படும் சிறுவர்கள் குறித்து ஆய்வுசெய்து பெறப்பட்ட அறிக்கைக்கான விவாதம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஐ.நா.சபையில் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-8)

# இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டித்து தமிழரின் பலத்தை வெளிப்படுத்துவோம்

## மாணவர் ஒன்றியங்கள் அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

மட்டு.- அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் 3 போராளிகள், நாட்டுப்பற்றாளர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோரின் படுகொலையைக் கண்டித்து இன்றைய நாளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டித்து தமிழர்களின் ஒன்றுபட்ட பலத்தையும் ஐக்கியத்தையும் வெளிப்படுத்துவோம்.

- இவ்வாறு மாணவர் ஒன்றியங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

அவை வெளியிட்டுள்ள அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் உட்பட நான்கு போராளிகள் மீதும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின முன்னாள நாடாளுமன்ற உறுப்பினா மீதும் திட்டமிட்ட வகையில் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவத்தினை எதிர்த்து இன்று சனிக்கிழமை "யாழ்.குடாநாடு தழுவிய பூரண ஹர்த்தால் நிகழ்விற்கு தமிழ்த்தேசிய" விழிப்புணர்வுக்கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்விற்கு அனைவரையும் பங்கேற்குமாறு யாழ் பல்கலைக்கழக சமூகமாகிய நாம் அழைக்கவுகின்றோம்.

தமிழ்த் தேசியத்தினைச் சிதைக்கும் நோக்குடன் கருணா என்ற தேசத்துரோகி பிரதேசவாதம் என்கின்ற சதிவலையை விரித்தபோது, தமிழ்த்தேசியத்தின் ஒற்றுமையை நிலை நிறுத்துவதற்கும், துரோகி கருணாவினுடைய துரோகத்தனத்தினை அழிப்பதற்கும் அர்ப்பணிப்புடன் முன்நின்று உழைத்த போராளிதான் இ.கௌசல்யன். ஆகவே இவருடைய இழப்பு என்பது இன்று தமிழர்களுடைய ஆன்மாவை சோகக்கடலில் சங்கமிக்க வைத்துள்ளது. போரினால் வெல்லமுடியாத புலிகளை சமாதானம் என்ற பொய் வேசத்தினை, மாயத்திரையை வைத்துக்கொண்டு சதி வேலைகளைத் திட்டமிட்ட வகையில் நிறைவேற்றிக் கொள்வதிலேயே இலங்கை அரசும், இராணுவமும் செயற்படுகின்றன என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

இதன் தொடர் நிகழ்வாகவே இ.கௌசல்யன் அவர்களின் படுகொலையும் இடம்பெற்றுள்ளது.

கௌசல்யன் ஒரு அரசியல் பணியை முன்னெடுக்கின்ற போராளி ஆவார். அரசியல் போராளிகள் எந்தப் பகுதிக்கும் சென்று, தமிழ் மக்களுக்கான அரசியல் பணிகளை முன்னெடுக்கலாம் என்று போர்நிறுத்த ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே, அரசியல் போராளி எந்த இடத்திற்கும் எந்த நேரத்திலும் செல்வதற்கான அனுமதி ஏற்கனவே ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளது. எனவே திட்டமிட்ட படுகொலையை முன்னெடுத்துக் கொண்டு அதனை மூடிமறைக்க முயற்சிப்பது எந்த வகையில் நியாயமாக அமையும்?

கருணா குழு என்ற குழுவே மட்டக்களப்பு, அம்பாறையில் தற்போது இல்லை. இலங்கை இராணுவமே அந்தக் குழுவின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு தனது சதி வேலைகளை முன்னெடுக்கின்றது என்று ஏற்கனவே அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் குறிப்பிட்டுள்ளார். எனவே இங்கு ஓர் உண்மை நிலையை இலங்கை இராணு வம் ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும். கருணா என்ற குழு தமிழ்த் தேசியத்தினை விட்டு முற்றுமுழுதாக அழிக்கப்பட்டும் வெளியேற்றப்பட்டும் விட்டது. அதனுடைய பெயரைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கை இராணுவம் தனது கைவரிசைகளைக் காட்ட முனையுமாக இருந்தால், இது சமாதான நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்துவதாக அமையும்.

இனியும் இவ்வாறான படுகொலை வேலைகளைச் செய்யாது நிறுத்தி, இலங்கையில் நிலைத்த சமாதானம் ஒன்றை ஏற்படுத்த இதய சுத்தியுடன் அரசு முன்வரவேண்டும்.

ஆகவே, இலங்கை இராணுவத்தினரின் சதிவேலையில் சிக்கி வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களுக்கும், நாட்டுப் பற்றாளரான சந்திரநேருவுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இந்தப் படுகொலை சம்பவத்தினை எதிர்த்து இன்று சனிக்கிழமை தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் முன்னெடுக்கும் பூரண ஹர்த்தாலுக்கு நாமும் ஒத்துழைப்பு வழங்குவதுடன், சகல அமைப்புகளையும் பொதுமக்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். பல்கலைக்கழக சமூகமாகிய நாம் அழைப்புவிடுக்கின்றோம் - என்றுள்ளது.

### தமிழ் மாணவர் ஒன்றியம்

கருணா என்கின்ற விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட ஒருவரின் பெயரினைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசும் அதன் படைகளும் நிகழ்த்தி முடித்த அராஜகச் செயல் மக்களை ஆத்திரமடைய வைத்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட கடலனர்த்தம் சம்பந்தமான கூட்டத்தை முடித்த பின்பு லெப்.கேணல் கௌசல்யன, ஏனைய போராளிகளும், நாட்டுப்பற்றாளர் சந்திரநேருவும் மட்டுவிற்கு மீண்டுகொண்டிருக்கும் பொழுது சீருடையினால் வழிமறிக்கப்பட்டு, நிராயுதபாணிகளாக இருந்தவர்களைச் சுட்டுக் கொலை புரிந்தது, ஸ்ரீலங்கா அரசின் சின்னத்தனத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

துரத்தப்பட்ட கருணா பெயரில் இயங்கும் ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளின் அட்டகாசங்களுக்கும், அதனால் ஏற்படுத்தப்படும் அடக்கு முறைகளுக்கும் எதிராக அச்சுறுத்தல்களின் மத்தியில் அஞ்சாத நெஞ்சனாய் அரசியல் நடத்தியவர் கௌசல்யன்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று கூறி புலிகளின் கைகளை கட்டிவிட்டோம் என்ற எண்ணத்தில் இராணுவம் நடக்கும் விதம் மக்களின் பொறுமைக்கு சோதனையாக உள்ளது. ஸ்ரீலங்கா அரசின் கபட எண்ணத்தினால் பலிக்கடாக்கள் ஆகுவதை தமிழ்மக்கள் தொடர்ந்தும் அனுமதிக்கப் போவதில்லை.

அரசின் அராஜகத்தை உலகுக்கு எடுத்தியம்பும் முகமாக எதிர்வரும் சனிக்கிழமை கடைகளைப் பூட்டி கல்வி, தொழிற் பணிகளை இடைநிறுத்தி கறுப்புக்கொடிகளை பறக்க விட்டு, சோககீதங்களை ஒலிபரப்பி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்- என்றுள்ளது.(8)

## சமய சந்நிதிகளில்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி வரை இலட்சார்ச்சனை இடம்பெறவுள்ளது. தினமும் முற்பகல் 10.30 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் வசந்த மண்டபப்பூசை இடம்பெற்று ஸ்ரீதேவி, பூமி தேவி சமேத வரதராஜப் பெருமானுக்கு இலட்சார்ச்சனை இடம்பெறவுள்ளது. (8-202-161)

★ ★ ★

தொல்புரம் கிழக்கு துரையன் வளவுப்பிள்ளையார் தேவஸ்தானத்திலும் தொல்புரம் மடத்துப் பிள்ளையார் தேவஸ்தானத்திலும் சதுர்த்தித் திருவிழா இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து தேவஸ்தானங்களில் விநாயகப் பெருமான் திருவீதியுலா வருதல் இடம்பெறும். (3-ரி-202)

## பொதுக் கூட்டங்கள்

வலி.தென்மேற்கு,பெப்.12

பண்டத்தரிப்பு தபால அலுவலக அபிவிருத்திச் சபையின் விசேட பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ளது.

தபால் அதிபர் எம். நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் நிரந்தரக் கட்டடம் அமைப்பது, தொலைபேசி இணைப்பு பெறுவது என்பவை தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

(8-202-135)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.12

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர் ஆலயத்தின் பொதுக்கூட்டம் நாளை 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தலைவர் சி. இராசரத்தினம் தலைமையில் மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

(8-7)

---

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரைவுள்ளது

### வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் பிற்போடல்

இன்று நடைபெறுவதாக பிற்போடப்பட்டிருந்த (2005.02.12) இச்சங்க வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் இன்றைய ஹர்த்தால் காரணமாக நடைபெறமாட்டாது. இக் கூட்டம் 2005.02.19ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும் என்பதை சகல பொதுச்சபை உறுப்பினருக்கும் அறியத்தருகின்றோம்.

சிரமத்திற்கு வருந்துகின்றோம்.

- தலைவர். - செயலாளர்.

(C/40919)(42-18-19)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி




செல்வி

### கணேசலிங்கம் சர்மியா

லண்டனை வதிவிடமாகக்கொண்ட செல்வி சர்மியா கணேசலிங்கம் அவர்கள் 12. 01. 2005 அன்று இறைபதமெய்திய செய்தி கேட்டு நேரடியாகவந்து துயர்பகிர்ந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் அவரது இறுதியாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் சர்மியாவின் பாடசாலையில் பிரார்த்தனைக் கூட்டம் நடத்திய ஆசிரிய மாணவர்களுக்கும் மற்றும் சகல விதத்திலும் எங்களுக்கு உதவியவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்து, அன்னாரின் 31 ஆம் நாள் நினைவுகள் இன்று (12. 02. 2005) சனிக்கிழமை அவரது லண்டன் இல்லத்தில் நடைபெறும் எனபதை அறியத்தருகின்றோம்.

தகவல்: ச.கனகலிங்கம் (பெரியப்பா)
220, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
T.P.:021-222 6641. (41995)

தகவல்: ச.கணேசலிங்கம்
168, South ESK.Road,
FOREST GAT, U.K. T.P.:0044/208 4718607

---

## 6ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்

### ஆழ்வார்பிள்ளை மார்க்கண்டு

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

மலர்வு 1941-03-10 — உதிர்வு 2004-08-19

மோகனம் இசைத்த இல்லத்தில் இன்று
முகாரி இராகம் கேட்குதே!
கூடித்திரிந்த பறவை ஒன்று
கூடுவிட்டு ஏகியதே!
நாடித்திரிந்த உறவுகள் யாவும்
நாதியற்று நிற்குதே - ஐயா!
தேடினாலும் கிடைத்திடா வெகு
தூரம் சென்றனையோ!

உங்கள் பிரிவால் துயருறும்:
மா.தயாளன் (மகன்),
டயாள் என்ரபிறைஸ்
கொழும்பு - யாழ். - கிளிநொச்சி.

கல்லூரி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
(41983)(26-19-17-42)

---

## தசாக அழைப்பு

அன்னை மடியில் 03 - 07 - 1928



ஆண்டவன் அடியில் 03 - 02 - 2005

வரணி மண் பெற்றெடுத்த பெருங்குரவர்

### ஞானபானு சிவஸ்ரீ ஐயாத்துரைக் குருக்கள்

(வரணி கரம்பைக் குறிச்சி பாலைநின்ற அத்தாய் மூத்த விநாயகராலய பரம்பரை அறங்காவலரும், தாவளை, இயற்றாலை கல்வளைப் பிள்ளையார் முதலான ஆலயங்களின் பிரதம குருவும்).

*தசாகக் கிரியைகள் : 13.02.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நடைபெறும்.*

*சபிண்டீகரணக் கிரியைகள்: 14.02.2005 திங்கட்கிழமை முற்பகல் நடைபெறும்.*

மேற்படி நிகழ்வுகளில் கலந்துகொண்டு குருக்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன், சபிண்டீகரணத் தினத்தன்று அவரது இல்லத்தில் நடைபெறுகின்ற மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

☞ தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

குருக்கள் குடியிருப்பு,
வரணி.

- குடும்பத்தினர்.

(41804)(42-19-17)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# பொறுமையின் எல்லையில் தமிழர்களின் தரப்பு

தமிழர் தரப்புத் தலைவர்களிடமிருந்து நேற்று முன்தினம் ஏறத்தாழ ஒரேசமயத்தில் வெளியான இரண்டு கருத்துக்கள் முக்கியமானவை.

ஒன்று - சுட்டுக்கொல்லப்பட்ட புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யனின் இறுதி நிகழ்வில் இரங்கலுரை நிகழ்த்துகையில், அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தது.

மற்றது - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கூறியது.

"எங்களைச் சீற்றமுற வைக்கும் பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெற்றாலும் எங்கள் மக்களின் நன்மைகருதி நாம் பொறுமை காக்கின்றோம். எங்களின் பொறுமையை இலங்கை அரசு எமது பலவீனமாகக் கருதக்கூடாது. பொறுமைக்கும் எல்லையுண்டு." - இப்படித் தமிழ்ச்செல்வன் கூறியிருக்கின்றார்.

பொறுமையின் எல்லைபற்றி விடுதலைப் புலிகளின் தலைவர்கள் கடந்த இரண்டரை மாதகாலத்துக்குள் பிரஸ்தாபித்திருப்பது இது இரண்டாவது தடவை.

கடந்த நவம்பர் 27ஆம் திகதி தாம் ஆற்றிய மாவீரர் தின உரையில் பொறுமையின் எல்லையில் புலிகள் இருக்கின்றார்கள் என்பதைத் தலைவர் பிரபாகரன் சர்வதேச சமூகத்துக்கும், இலங்கை அரசுக்கும் தெட்டத் தெளிவாக்கியிருந்தார்.

"பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் ஓர் எல்லையுண்டு. அந்த எல்லைக்கோட்டை நாம் அடைந்துவிட்டோம். எனவே, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக நாம் முன்வைத்த யோசனைகளின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலம் தாமதிக்காமல், பேச்சு நடத்த அரசு முன்வர வேண்டும்" - என்று தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும், அவரது உரையின் பின்னர் - ஒருமாதம் கழித்து - இலங்கைத் தீவைத் தனது கொடூரக் கரங்களால் தாக்கிய ஆழிப்பேரலை அனர்த்தத்தின் அகோரப் பாதிப்புகள் கருதி, பழைய நிலைமைகளைச் சற்று ஒதுக்கிவைத்துவிட்டு, அரசுடன் இணைந்து அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு இறங்கிவந்தனர் புலிகள்.

ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தத் தவறியுள்ள அரசுத் தரப்பு, கௌசல்யன் போன்ற மூத்த தலைவர்களின் படுகொலைகளுக்கு வழிசெய்ததன் மூலம் நிலைமையைக் குழப்பி, புலிகளை மீண்டும் பொறுமையின் எல்லைக் கோட்டுக்கு - அந்தந்துக்கு - தள்ளிவிடுகின்றது.

இந்தப் பொறுமையின் எல்லை குறித்த இரங்கலுரையில் தமிழ்ச்செல்வன் தெரிவித்த கருத்தின் பிறிதொரு வடிவத்தைத்தான் வேறு வார்த்தைகளில் நாடாளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பியான இரா.சம்பந்தன் எச்சரிக்கைப் பாணியில் வெளியிட்டிருக்கின்றார்.

"வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பெரும் பகுதி இப்போதே அரசின் வசம் இல்லை. தொடர்ந்தும் அப்பிரதேசத்தைக் கவனிக்காமல் அரசு உதாசீனப்படுத்தினால் வடக்கு - கிழக்கு மாகாணத்தை அரசு முற்றாகவே இழக்க நேரிடும்; அதை யாராலும் தடுக்கமுடியாது" - என்று நாடாளுமன்றத்தில் வைத்து அரசுக்கு முன்னெச்சரிக்கை விடுத்திருக்கிறார் அவர்.

தமிழர் தாயகத்தில் அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை அரசுத் தரப்புடன் இணைந்து உருவாக்கும் முயற்சியில் புலிகள் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனால், அது இன்னும் சாத்தியமாக்கப்படவில்லை.

ஆனால், அப்படி ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்க விடமாட்டோம் என்று அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ஜே.வி.பி. சூளுரைத்து வருகின்றது.

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியை நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்த ஜே.வி.பியின் மூத்த தலைவர்கள்,அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளில் அரசுடன் சேர்ந்து புலிகள் பங்காற்றுவதற்கு - இது விடயத்தில் நிர்வாக நடவடிக்கைகளை அரசும், புலிகளும் பகிர்ந்துகொள்வதற்கு - இடமளிக்கமாட்டோம் என்று உறுதிபடக் கூறியிருக்கின்றார்கள்.

அரசின் பங்காளிக்கட்சி ஒன்று தனது மேலாண்மைவாத - பௌத்த, சிங்களப் பேரினவாத - போக்கில் இவ்வாறு பிடிவாதமாக - அடம்பிடிக்கும் தன்மையில் - தொடர்ந்தும் செயற்படுமானால் -

அதன் அழுத்தத்துக்கு இடம்கொடுத்து இலங்கை அரசுத் தரப்பும் தொடர்ந்து தமிழர்களை உதாசீனப்படுத்தும் போக்கில் காரியமாற்றுமானால் -

தமிழ்த் தலைவர்கள் கூறியபடி பொறுமையின் எல்லைக்கோட்டைத் தாண்ட வேண்டிய நிலைக்குச் சிங்களத் தலைமைகளால் அவர்கள் தள்ளப்பட்டுவிடுவார்கள். தமிழ்த் தலைவர்கள் எச்சரிக்கை செய்திருப்பது போல வடக்கு - கிழக்கை அரசு முற்றாக இழக்க வேண்டிய ஏது நிலையும் உருவாகும்.

இலங்கை அரசும், சிங்களத் தலைமையும் புத்தி சாதுரியமாக நடந்து இத்தகைய விபரீதங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதே அவற்றின் நலனுக்கு உகந்தது; நல்லது.

# பாதிப்புற்றோருக்கான நிவாரண விநியோகத்தில் பாவனைக்குதவாத பொருள்களை வழங்கலாகாது

## பிரதேச செயலர்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்து

கொக்குவில், பெப்.12

சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான நிவாரண விநியோகத்தில் பாவனைக்குதவாத அநாவசியமான பொருள்கள் வழங்கப்படக்கூடா. இதனைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு பிரதேச செயலர்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபத்தில் யாழ். அரச அதிபர் கே.கணேஸ் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாதிக்கப்பட்டோருக்கு 175 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் இவ்வார இறுதியிலிருந்து அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டவாறு வழங்கப்பட வேண்டிய உணவுப் பெறுமதியினைக் கணக்கீடு செய்துகொள்வதுடன், ஒவ்வொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்களுக்குரிய உச்ச உரித்தளவினை உடனடியாக அறிவித்து உரிய காலத்தில் விநியோகம் மேற்கொள்வதை உத்தரவாதப்படுத்திக் கொள்ளவேண்டும்.

மேலும், இந்த நிவாரணம் 5 நபர்களுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை என்பதுடன், உலருணவு வழங்கப்படும் குடும்பங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்ற அதேகாலத்தில், வேறு எதுவித அரச நிவாரணமும் வழங்கமுடியாது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தற்பொழுது மக்கள் வங்கிக்கு மேலதிகமாக இலங்கை வங்கி, கிராமிய வங்கிகளின் சேமிப்புக் கணக்கு மூலம் கொடுக்கப்படலாம். எனவே, பிரதேச செயலர்கள் இவர்களுக்கான பட்டியல்களைத் தயாரித்துத் தகுதியுடையவர்களுக்குக் கொடுப்பனவை மேற்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நலன்புரி நிலையங்களை விட்டு வெளியே செல்லும் மக்கள் சம்பந்தமாக அவர்கள் செல்லும் இடம், குறித்து வைக்கப்படுவதுடன், அவர்களுக்கான நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படவேண்டும்.

சமையல் பாத்திரங்களுக்கான 2 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும். நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியே செல்லும் மக்களுக்குச் சமையல் பாத்திரம் வழங்குவதற்குச் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் சம்மதம் தெரிவித்துள்ளன. எனவே, நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியே செல்கின்ற மக்களினுடைய பெயர்ப்பட்டியல் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்படுவதுடன். நலன்புரி நிலையத்தை விட்டு வெளியே செல்கின்ற மக்களுக்குரிய சமையல் பாத்திரங்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றதா என்பதைப் பிரதேச செயலர்கள் மேற்பார்வை செய்யவேண்டும்.

புள்ளி விவரங்கள் சம்பந்தமாக ஒவ்வொரு பிரதேச செயலரும் தனிப்பட்ட கவனம் செலுத்திக் கேட்கப்படுகின்ற சகல புள்ளி விவரங்களையும் இயன்றளவு துரிதமாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது. (8-76)

மருதங்கேணிக் கோட்டத்திலுள்ள

# ஒன்பது பாடசாலைகள் வேறு இடங்களுக்கு மாற்றம்

வடமராட்சி கிழக்கு,பெப்.12

மருங்கேணிக் கோட்டத்தில் 9பாடசாலைகள் வேறு இடங்களுக்கு இடமாற்றப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கான மதிப்பீடுகள் வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, குடத்தனை கரையூர் றோ.க.த.க. பாடசாலை, மாமுனை அ.த.க. பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை, தாளையடி றோ.க.த.க. பாடசாலை, ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி றோ.க.த.க. பாடசாலை, வெற்றிலைகேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகள் ஆழிப்பேரலையினால் சேதமடைந்ததுடன், அவை கடலில் இருந்து 300 மீற்றர் தூரத்திற்குள் அமைந்துள்ளன.

எதிர்காலத்தில் பாதுகாப்பான குடியிருப்புக்கள் அப்பகுதியில் அமைக்கப்படவுள்ளதைப் போன்று இந்த 9 பாடசாலைகளையும் வேறு இடங்களில் புதிதாக நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (8-182)

# ஆள்சேர்ப்புப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.12

தேசிய சேமிப்பு வங்கியின் வங்கி உதவியாளர் தரம் ஒன்று பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கென யாழ். மாவட்டத்தில் 18 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. (10)

# நெடுந்தீவு இறங்குதுறை ஆழமாக்கும் திட்டத்தை துரிதப்படுத்துமாறு அரச அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், பெப்.12

நெடுந்தீவு துறைமுக இறங்குதுறையின் கரையோரத்தை ஆழமாக்கும் திட்டத்தினைத் துரிதப்படுத்துமாறு நெடுந்தீவு உதவி அரச அதிபர் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நெடுந்தீவுத் துறைமுகத்தின் இறங்குதுறை ஆழம் குறைந்து காணப்படுவதால் படகுகளில் பொருள்களைக் கொண்டு செல்வோர் அவற்றைக் கரைக்குக் கொண்டு சென்று இறக்குவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதுதொடர்பாக 17.09.2004 அன்று யாழ். செயலக தேர்தல் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு இறங்குதுறையினை ஆழமாக்கும் திட்டத்தினை உடனடியாகச் செய்யுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அரச அதிபர் பொறுப்புக்களை ஒப்படைத்திருந்தார். ஆயினும், இதுவரை துறைமுகத்தினை ஆழமாக்கும் முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இதுதொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிடம் தொடர்புகொண்ட போது இறங்குதுறையினை ஆழமாக்கக் கூடிய உபகரணங்கள் எதுவும் தம்மிடம் இல்லையெனக் கைவிரித்துள்ளார்கள். எனவே, இதுதொடர்பாக அதிக கவனமெடுத்து இறங்குதுறையினை ஆழமாக்கிப் பயணிகளின் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ள உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (8 -13)

# அறுவடைசெய்த வயல்களில் சிறுதானியப் பயிர்ச்செய்கை

## உடன் ஆரம்பிக்க வேண்டுமென்கிறார் விவசாயப் போதனாசிரியர்

வலி.தென்மேற்கு, பெப்.12

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் நெல் அறுவடை செய்யப்பட்ட வயல்களில் சிறுதானியச் செய்கையை உடன் ஆரம்பிக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் கீரிமலை கமநல கேந்திர நிலைய விவசாயப் போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவர்ணன்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

நெல் அறுவடை செய்த வயல் காணிகளில் ஈரலிப்புத் தன்மை காணப்படுவதால் பயறு, உழுந்து, எள்ளு போன்ற சிறுதானியங்களை விதைத்துப் பயன்பெற முடியும்.

கடந்த காலபோக நெற்செய்கையின் போது தங்கள் கால்நடைகளைக் கட்டி வளர்த்து விவசாயிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய கால்நடை வளர்ப்போர் தொடர்ந்தும் விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் சிறுதானியச் செய்கைக்கு ஊறுவிளைவிக்காது தங்களது கால்நடைகளைக் கட்டி வளர்க்கவேண்டும்.

இதுதொடர்பாக விவசாயிகள், சம்மேளனங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (8-203-135)

### நாளை

மாசி 01
ஞாயிற்றுக்கிழமை
13.02.2005
திதி : பஞ்சமி
முன்னிரவு 9.54 வரை
நட்சத்திரம் : ரேவதி
முன்னிரவு 07.52 வரை
சுபநேரம் : 09.33 - 11.03
ராகுகாலம் : 05.03 - 06.33
(யாவும் பழைய நேரப்படி)

# வெதுப்பக உரிமையாளர்களுக்கென புதியதொரு சங்கம் அமைக்க முடிவு

நல்லூர், பெப்.12

இதுவரை காலமும் இரு சங்கங்களின் கீழும் தனியாக இயங்கிவரும் வெதுப்பக உரிமையாளர்கள் அடுத்த மாதம் முதல் ஓர் அமைப்பின் கீழ் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள இணக்கம் கண்டுள்ளனர்.

இதன்படி, யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம், யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம் இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டுப் புதியதோர் அமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

இந்த இணைப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் பொருட்டு ஏழு பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழு இணைப்பு குறித்த அனைத்து வேலைத் திட்டங்களையும் ஒருமாதத்தில் நிறைவுசெய்யவுள்ளதுடன், புதிய அமைப்புக்கான நிர்வாக சபை ஒன்றையும் தெரிவுசெய்யவுள்ளது.

இதுதொடர்பாக அண்மையில் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலை விடுதலைப் புலிகளின் கூட்டுறவுப் பகுதி ஒழுங்குசெய்திருந்தது. (8-111)

### உதயவாக்கு

கூழும் குடியும் ஒருங்கிழங்கும்
கோல்கோடிச் சூழாது செய்யும் அரசு.

- திருக்குறள்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

மூன்று சிறிய கண்ணாடி சோக்கேஸ்'கள விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவசக்தி களஞ்சியம், உரும்பிராய். (சி-40890)

நல்ல நிலையிலுள்ள G.S 125 Suzuki மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி 234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (சி-40903)

எம்மிடம் 35X20 அடி நீள அகலமுடைய கல்தூண்கள், பனைமரங்கள் மூலமாக அமைக்கப்பட்ட கொட்டகைகள் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: T.P.: 077 6081372, 077 6063173.(41880)

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், லவ் பேட்ஸ், யாவா, பிஞ்சஸ், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், கொக்கொடைல் குருவிகளும், கூடுகளும் மற்றும் அடுக்குச் செவ்வரத்தை, றோசாக் கன்றுகள், குறோட்டன், பூச்சாடிகள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச் சந்தி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (சி-40623)

NPGP... தொரிலக்கமுடைய பட்டர்க் கலர் (Butter Colour) ஓட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 077 6146020. (சி-40918)

தனிப்பாவிப்பில் நல்ல நிலையிலுள்ள Honda CD 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிழுதரன், பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் வடக்கு, மானிப்பாய் றோட், இணுவில். (ப.நேரம் மாலை 5-6 மணி). (41962)

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, வட்டு. மேற்கு, வட்டு சித்தன்கேணி வீதியில் (அத்தியடி பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) சகல வசதிகளும் கொண்ட 3 படுக்கை அறைகள் 7½ பரப்புக் காணியுடன் (Luxury House) வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.881/1, Fussels Lane, Wellawattai, Colombo - 06. T.P.: 0112-366624, 077 - 6675467, 021 - 222 2782. (41850)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, கலட்டி அம்மன் கோயில் வீதியில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 222 2521, 222 2216. (41986)

## கடை விற்பனைக்கு

இல.77, கே.கே.எஸ். வீதியில் தற்போது வியாபாரம் நடைபெறும் கடை ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777 744863, 021 - 222 2990. (41985)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

காவலுக்குரிய Purebred Doberman Pincher Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபால சிங்கம் (நல்லூர் வீடியோ சென்ர்) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41985)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்) தொடர்பு: New R.S.K. Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். New R.S.K. Farm மானிப்பாய் றோட் (பெரிய மதவடி), உடுவில். (41989)

Prima உயர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electrionic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41988)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர், கல்பேட் கூடிய நிறையில் தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (41993)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 14.02.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் சென்ரர் - சந்நிதி, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (41599)

## தவறிவிட்டது

வே.பரமேஸ்வரன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் மோட்டார் சைக்கிளிற்குரிய வரி அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன அடங்கிய கைப்பை ஒன்று சுன்னாகம் இலங்கை வங்கி வாகனத்தரிப்பிடத்தில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் இலங்கை வங்கியில் ஒப்படைத்துதவவும். (40436)

கிருஷ்ணபிள்ளை ஹரீஸ் என்பவரது தேசிய அடையாள அட்டை (842591651V), போஸ்டன் யாழ்ப்பாணத்திற்கும் திருநெல்வேலிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். ஜீவன் கொமினிக்கேசன், கந்தர்மடம் சந்தி, கந்தர்மடம். T.P.: 021 - 222 3426. (41992)

## மோ.சைக்கிள் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலருக்கும் மோட்டார் சைக்கிள் வாடகைக்கு வழங்கப்படும். தொடர்பு: 360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.:077 6544544, 077 6660177. (40436)

## மணமகள் தேவை

1974இல் பிறந்த, U.K. இல் வசிக்கும், அனுஷ நட்சத்திர இலக்கனத்தில் செவ்வாயுள்ள, B.Com. பட்டதாரி மணமகனுக்கு பொருத்தமான, சிவந்த, அழகான, படித்த பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி T.P.: 0777 514427. (41850)

1975 இல் பிறந்த, 8 இல் செவ்வாய், சதய நட்சத்திரம், U.K. இல் வசிக்கின்ற அழகிய மணமகனுக்கும் 1972 இல் பிறந்த உத்தரட நட்சத்திரம் 4 ஆம் பாதம், 5'8" உயரமான மணமகனுக்கும் U.K. இல் பிரஜாவுரிமையுள்ள மணமகள் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கையம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி T.P.: 0777 514427. (41849)

## மணமகன் தேவை

1969இல் பிறந்த, உத்தர நட்சத்திரம், முதலாம் பாதம் 4இல் செவ்வாயுள்ள பட்டதாரி ஆசிரியைக்கு (நல்ல கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகளுக்கு) உள்ளூர் உத்தியோக மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கையம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. T.P.: 0777-514427. (41842)

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த, 1978ஆம் ஆண்டு ரோகிணி நட்சத்திரம் உள்ள அழகான ஆசிரியைக்கு நல்ல அரச உத்தியோகமுள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடனும் சமீபத்தில் எடுத்த புகைப்படத்துடனும் தொடர்புகொள்க. M.ரவீந்திரன், துர்க்கையம்மன் கோயில் பின்வீதி, சாவகச்சேரி. T.P.: 0777 - 514427. (41956)

## சுகாதாரத் தொண்டர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடமையாற்றிய சுகாதாரத் தொண்டர்கள் அனைவரையும் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளை செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சுகாதாரத் தொண்டர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-203)

## பல்கலைக்கழகத்தில் ஈரானியத் திரைப்படம்

யாழ்பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் ஈரானிய பெண் திரைப்பட நெறியாளர் மர்ஷியே மெஸ்கினி உருவாக்கிய 'நான் பெரிய மனுஷியான நாள்' (The day I became a women) என்னும் திரைப்படம் வீடியோக்காட்சி ஆங்கிலத்துணைத் தலைப்புகளுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. (8-202)

## மணமகள் தேவை

கௌரவமான குடும்பத்தில் 1958 இல் பிறந்த, அச்சுவினி நட்சத்திரம் 3ஆம் பாதம், U.K. நிரந்தரப் பிரஜையான, லக்கினத்தில் செவ்வாய், B.Sc., MSc. Diploma Computer H.S.B.C Bank U.K. இல் வேலை. 5'3" உயரமுள்ள சைவபோசன மணமகனுக்கு சிவந்த அழகான B.Sc. அல்லது B.A. அல்லது Computer படித்த பொருத்தமான 5'2" உயரமான மணமகள் தேவை. வயது 8,9 வித்தியாசம் இருக்க வேண்டும். மணமகன் இங்கு வந்து திருமணம் செய்வார். தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கையம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. T.P.: 0777 514427 (41955)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

12.02.2005



செல்வி ருபானி

லண்டனில் வசிக்கும் திரு.திருமதி கமறைாசன் சிவசுபோதினி தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி.ருபானி தனது முதலாவது பிறந்த நாளை இன்று (12.02.2005) சனிக்கிழமை லண்டனில் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா லண்டனிலுள்ள பெரியமாமா, கரன்மாமா, சுவிஸிலுள்ள அம்மப்பா, அம்மம்மா, மாமா, சித்தி, கைதடியிலுள்ள அம்மப்பா, அம்மம்மா, சித்தி, குட்டி மாமா, குட்டி அம்மப்பாமார், பூட்டி, கொழும்பிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அக்காமார், அப்பம்மா, சின்னத்தை, மாமா, மச்சாள் மார், கனடாவி லுள்ள அத்தை, மாமா, மந்து விலிலுள்ள அத்தை, மாமா, மச்சாள், மச்சான், பளையிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அக்கா மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் கைதடி கயிற்றசிட்டிக் கந்தன் அருளுடன் பல்கலையும் பெற்றுப்பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
கைதடி. (41833) சி.சிவகுரு (அம்மப்பா).

## OPENING CEREMONY

எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வூட்டும் நற்செய்தி ......!!

புதிதாக உங்கள் நகரில்......!!

**Mobitel GSM**

நிகழும் மங்களகரமான தாரண வருடம் மாசி 2ம் நாள் (14.02.2005) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் 1.00 மணிவரையுள்ள சுப வேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படும்

**"Atlas Telecom"**

என்னும் புதிய ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளதால் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வைபவத்தில் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது சேவைகளாவன

சொகுசு பஸ், வான் சேவை
யாழ் ⟷ கொழும்பு
யாழ் ⟷ திருமலை
மேலும் பல

Air Line Ticketing
Internet Services
Computer Games

412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
T.P - 021 2222031, 222 2990

இங்ஙனம்
**"Atlas Telecom"**

## உபநயன ப்ரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்ரீகைலாச விநாயகர் துணை

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் தாரண வருஷம் மாசி மாதம் முதலாம் நாள் (13.02.2005) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதியும் ரேவதி நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுப நன்னாளில் காலை 8.30 மணிமுதல் 10.13 மணிவரையிலான மீன லக்ன சுபவேளையில்.

எமது பேரன்

சிரஞ்சீவி **ஸ்ரீவத்ஸ சர்மாவுக்கு**

சௌள உபநயன ப்ரம்மோபதேசம் செய்யப் பத்தமேனி பிள்ளையாரினதும் ஸ்ரீகைலாச விநாயகப் பெருமானினதும் திருவருள் துணையுடன் மறைந்தும் மறையாமல் எமை ஆசீர்வதித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ காஞ்சி மா முனிவரின் ஆசீர்வாதத்துடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் இல.95, கோயில் வீதியில் அமைந்திருக்கும் லஷ்மி பவனம் எனும் எமது க்ருஹத்தில் நடைபெற இருப்பதால் அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து வடுவை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திருமதி சா.குமாரசாமி சர்மா
சி.ந.கு.மணிக்குருக்கள்
திரு.திருமதி கு.கோபாலன் சர்மா தம்பதிகள்

மு.சிவசுப்பிரமணிய சர்மா விமலாதேவி தம்பதிகள்
சி.சிவபால சர்மா மீனலோஜினி தம்பதிகள்
இல.95, கோவில் வீதி, கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 6407

- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சுபம்.

(C/40900) (24-11-16)

# வடக்கு - கிழக்கை முற்றாகவே இழக்கும் நிலை அரசுக்குவரும்

## எச்சரிக்கின்றார் சம்பந்தன் எம்.பி.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பெரும் பகுதி இப்போதே அரசின் வசம் இல்லை. தொடர்ந்தும் உதாசீனப்படுத்தினால் வடக்கு-கிழக்கை முற்றாகவே இழக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன்.

ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான இரண்டாவது நாள் விவாதத்தில் நேற்றுமுன் தினம் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இந்த எச்சிக்கையை விடுத்தார் சம்பந்தன் எம்.பி.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் தெரிவித்ததாவது:-

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இன்றும் மரண ஓலங்கள் ஓயவில்லை. ஆனால், அங்கே தீய சக்திகள் அரச படையினரின் பாதுகாப்புடன் மதவிரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளன.

கல்முனையில் ஒரு கிராமத்தில் காலம் காலமாகக் குடியிருந்த முஸ்லிம் குடும்பங்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு அங்கே புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு சென்றபோது அப்பிரதேச மக்கள் கண்ணீருடன் அதைக் கூறினர்.

அதேபோன்று கந்தளாய் குளக்காட்டின் மீதும் சிலை அமைக்கப்படுகின்றது. இது அப்பிரதேச மக்களை வேதனைப்படுத்தும் ஒரு செயலாகும்.

இடைக்கால நிர்வாகம் என்றவுடன் ஜே.வி.பியினர் அலறி அடித்துக்கொண்டு ஓடுகின்றனர்.

அரசு எமது மக்களைப் புறக்கணிக்கும் போது அவர்களுக்குச் சேவை செய்வதும், பாதுகாப்பு வழங்குவதும் யார்?

விவாதத்தில் கலந்துகொள்ளாமல் மௌனம் சாதிப்பதால் உண்மை நிலையை மூடி மறைத்து விட முடியாது.

ஆழிப்பேரலை கரையோர மக்களை விரட்டி அடித்துவிட்டது. மறுபுறம் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்று இராணுவம் எமது மக்களை விரட்டியடித்துள்ளது. அரசு எமது மக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகின்றது. இந்த நிலை தொடர்ந்தால் அரசு வடக்கு - கிழக்கு மாகாணத்தை முற்றாகவே இழக்க நேரிடும் என்றார் சம்பந்தன்.

கடற்கரையோரங்களில் இருந்து மீனவர்களையும் பொதுமக்களையும் மீண்டும் குடியேறவிடாமல் விரட்டியடிக்கும் அரசு, அவர்களுக்கான மாற்றுக்காணிகளை வழங்கவில்லை, சொந்த இடங்களில் இருந்து அந்த மக்கள் விரட்டப்படுகின்றார்கள் அகதிமுகாம்களில் இருந்தும் விரட்டப்படுகின்றனர், இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கும் பாதிக்கப்பட்ட


நாடாளுமன்றிலிருந்து...

மக்கள் எங்கே போவார்கள்? இப்படி ஒரு கேள்வியை எழுப்பினார் கொழும்பு மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான தியாகராஜா மகேஸ்வரன்.

புதன்கிழமை சபை நிகழ்வுகள் முடிவுறும் வரை பேசிக்கொண்டிருந்த மகேஸ்வரன், நேற்று முன்தினம் தொடர்ந்து உரையாற்றினார்.

தனது உரையை நிறைவு செய்யும வேளையில் ஐநா.செயலாளர் நாயகம் கோபிஅனானின் இலங்கை விஜயம் தொடர்பாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்படட நாடுகளுக்கு கோபி அனான் விஜயம் மேற்கொண்டு வந்தபோது, தமிழ்ப் பிரதேசங்களுக்கு அவரைச செல்லவிடாமல் இலங்கை அரசு தடைவிதித்து விட்டது.

கோபி அனான் இந்தோனேஷியாவிற்குச் சென்ற போது அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் சென்றார். புரட்சிப்படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் சென்றார். இந்தோனேஷிய அரசு எதற்கும் தடைபோடவில்லை. மனிதாபிமானத்துடன் இந்தோனேஷிய அரசு நடநது கொண்டது. ஆனால், இலங்கை அரசிடம் பெருந்தன்மையுமில்லை மனிதாபிமானமும் இல்லை.

நீதி நியாயம் எல்லாவற்றிற்கும் சாவுமணி அடித்துவிட்டார்கள்.

அரசியல் தலைவர்களே நீதிபதிகளையும் நீதியரசர்களையும் வழிநடத்துகின்றனர். நீதியும் ஜனநாயகமும் மரணித்துவிட்டன.

இந்த அரசுத்தலைவர்கள் உள்ளூர், வெளியூர் தொண்டர் நிறுவனங்களுக்கு மட்டும் தடைபோடவில்லை. தமது கூட்டாளிகளான ஜே.வி.பியினரையும் ஓரம் கட்டுகின்றனர்.

ஜே.வி.பியினர் தென்பகுதியில் மேற்கொண்டுவரும் நிவாரணப்பணிகளுக்கு எந்த விதமான முக்கியத்துவமும் வழங்கப்படக்கூடாது என்று அரச ஊடகங்களுக்கு கண்டிப்பான கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜே.வி.பியினரின் வளர்சசியைக் கண்டு அரசு பீதியடைந்துள்ளது. தமது சிங்கள சகோதரர்களுக்கே இந்த நிலை என்றால் தமிழ்மக்களை இந்த அரசு எப்படிப் பாதுகாக்கப்போகிறது? - என்றும் மகேஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

சுதந்திர தினத்தன்று எமது தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க விடுதலை செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால்,



ஜனாதிபதியோ தனது சர்வாதிகாரப் பலத்தால் கொலைக் கலாசார அரசியலுக்குத் தூபமிடுகின்றார் எனவும் மகேஸ்வரன் எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

**அமைச்சர் மைத்திரிபால சிறிசேன**

சபைமுதல்வரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன விவாதத்தை வேறுதிசைக்குத் திருப்பினார்.

1982ஆம் ஆண்டு அப்போது உள்ளூராட்சி நிர்வாக சேவைகள் அமைச்சராக இருந்த முன்னாள் ஜனாதிபதிதான் முதன்முதலாகக் கடற்கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்கினார். இந்தச்சட்டத்தின்படி ஒருகிலோ மீற்றர் தூரம்வரை அரச சொத்தாகவும் பாதுகாப்புப் பிரதேசமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது என்று அவர் சுட்டிக்காட்டினார். இந்தச்சட்டத்தை அப்போது முதல்கண்டிப்பாகச் செயற்படுத்தியிருந்ததால் இன்று கரையோரப் பிரதேசத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களை ஓரளவு குறைத்திருக்க முடியும் என்றும் அவர்கூறினார்.

இது விடயத்தில் சட்டம் எதையும் நாம் புதிதாகக் கொண்டுவரவில்லை. அப்போதே ஐக்கிய தேசியக் கட்சியினால் சட்டமாக்கப்பட்ட விடயம்தான் இது என்று பந்தை எதிர்க்கட்சியினரின் பக்கமே தள்ளிவிட்டார் சபை முதல்வர் மைத்திரிபால சிறிசேன.

சமூகசேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சுமேதா ஜயசேன, ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் மற்றும வழங்கப்பட்ட ஏனைய உதவிகள் தொடர்பான பட்டியலைச் சபையில் வாசித்தார்.

உடனடி நிவாரணப் பணிகளுக்காகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் தலா ஒரு கோடி ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. மரணமானவர்களின் குடும்பங்களுக்குத் தலா பதினையாயிரம் ரூபா வீதம் நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்தச் சமயத்தில் அமைச்சரின் பேச்சுகள் அனைத்தையும் நிராகரிப்பதுபோல் அமைந்திருந்தது ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான மஹிந்த விஜேயசேகரவின் பேச்சு.

அரசினதும், அமைச்சரினதும் கூற்றுக்கள் யாவும் பேச்சிலும், எழுத்திலும் மட்டுமே. நடைமுறையில் எதுவும் இல்லை என்றார் மஹிந்த விஜேசேகர.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்ட ஐயாயிரம் காசோலைகள் வங்கிகளின் இருந்து பணம் இல்லை என்று திரும்பி வருகின்றன. இதோ, அதற்கு ஆதாரம் என ஒரு காசோலையையும்

(12ஆம் பக்கம் பார்க்க)

### அனர்த்த மீள்கட்டுமானத்துக்கான

# புலிகளின் தனிக்கட்டமைப்புக் கோரிக்கை முஸ்லிம்களுக்கு சந்தேகத்தைத் தந்துள்ளது

## ஹக்கீம் நாடாளுமன்றில் உரை

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான நிவாரணப் பணிகளுக்குத் தனியான ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் எனப் புலிகள் கேட்பது முஸ்லிம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகக் கூறினார்.

ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான இரண்டாவது நாள் விவாதத்ததில் உரையாற்றும் போதே ரவூப் ஹக்கீம் இப்படிக் கூறினார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் உயிரிழந்தோர், காணாமற்போனோர், அகதிகளானோர் பற்றிய புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது தென்மாகாணத்தில் ஏற்பட்ட இழப்புகளைக் காட்டிலும் கிழக்கில் ஏற்பட்ட இழப்புகள் பலமடங்கு அதிகமானவை. கிழக்கில் விவசாயிகளும் மீனவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், இந்த அரசு தென்பகுதி மீனவர்களுக்குக் காட்டும் அக்கறையில் சிறிதாவது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள மீனவர்கள், விவசாயிகள் விடயத்தில் காட்டத் தவறிவிட்டது. இவர்களுக்கு அரசின் உதவிகள் முழுமையாகக் கிட்டவில்லை என்பதுதான் உண்மை.

ஒரு பக்கம் 'சுனாமி' அனர்த்தம்; மறுபககம் 'ஆமி' அனர்த்தம்.

மீள்குடியேற்றம் என்ற பெயரில் முஸ்லிம் கிராமங்களில் திட்டமிட்ட வகையில் சிங்களவர்களைக் குடியேற்றுகின்றனர். அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் முஸ்லிம் மக்கள் வாழும் இடங்களில் புத்தர்சிலைகளை வைக்கின்றனர்.

கிழக்கில்தான் இந்த நிலைமை என்றால், தென்பகுதியிலும் அதுதான். கிரிந்த முற்றும் முழுதுமான முஸ்லிம் மீனவர் கிராமம். ஆனால, இப்போழுது தொண்ணூறுக்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்களை அங்கு கொண்டுசென்று குடியமர்த்தி உள்ளது அரசு. இன வன்முறைகளுக்கு வழிவகுக்கும் இப்படியான திட்டங்களை அரசு கைவிடவேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மை இனத்தவர் ஒருவரே அரச அதிபராக இருக்கின்றார். இவரால் எமது மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை. இதனால், தமிழ் மொழி பேசக்கூடிய ஒருவரை மேலதிக அரச அதிபராக நியமிக்க வேண்டுமென்றால், அங்கு வாழும் தமிழர்கள் தமிழர் ஒருவரை நிய்மிக்க வேண்டும் என்கின்றனர். கடைசியில் இந்த நிலையால் இரு சமூகத்தவர்களுமே பாதிக்கப்படுகின்றனர்.

அப்படியானால் மட்டக்களப்பில் தமிழர் ஒருவர்தான் அரச அதிபராக இருக்கின்றார். அங்கு வாழும் முஸ்லிம்கள் தமக்கென ஒரு மேலதிக அரச அதிபரைக் கேட்டால் நிலைமை என்னவாகும்?

தமிழ் - முஸ்லிம் மக்கள் அற்ப விடயங்களுக்கு எல்லாம் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது.

அனர்த்த நிவாரணப் பணிகளுக்கென வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குத் தனியான கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டும் எனப் புலிகள் கோருவது அர்த்தமற்றதாகும். இது முஸ்லிம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. இவ்விடயம் தொடர்பாக நாளை (வெள்ளி) அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தின்போது விவரமாகப் பேசுவேன் - என்றும் ஹக்கீம் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேற்றம் செய்வதற்குத் தேவையான காணிகள் இல்லை. அவர்களுக்குத் தேவையான காணிகளைப் பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப்புடன் இணைநது நாம் அமைததுள்ள முஸ்லிம் சமாதானச் செயலகம் நாளை வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக இக்காணி விவகாரம் தொடர்பாக அரச சமாதானச் செயலகத்துடன் பேச்சுக்களை நடத்தவுள்ளது - என்றும் ரவூப் ஹக்கீம் கூறினார்.(க-8)

# அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தலைவர் பிரபாவுக்குப் புகழாரம்

நாடாளுமன்ற விவகார, கிறிஸ்தவ சமய விவகார அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் புகழாரம் சூட்டினார்.

அரசு கடல் அனர்த்தப் பிரதேசமாக நூறு மீற்றர் தூரத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. ஆனால், புலிகளின் தலைவர் பிரபாகரன் கடலோரத்தில் கட்டுமானங்களை அமைப்பதற்கான எல்லையை முந்நூறு மீற்றர் வரை நிர்ணயித்துள்ளார். அவர் யதார்த்தம் புரிந்து செயற்படுபவர். அதற்காக அவரைப் பாராட்டுகிறேன் என்றும் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் கூறினார்.

அதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று, மக்களைச் சந்தித்து, ஆறுதல் கூறியதுடன் பல்வேறு உதவிகளையும் வழங்கினேன். ஆனால், எல்லாத் தேசியப் பத்திரிகைகளும் இதனை இருட்டடிப்புச் செய்துவிட்டன. ஆனால் 'உதயன்' பத்திரிகை மட்டும் இது பற்றிய செய்திகளை வெளியிட்டது. அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆழிப்பேரலை அனர்த்தங்கள் தொடர்பான விவாதம் வியாழனன்று இரண்டாவது தினமாக நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இவ்விவாதத்தின்போது அனர்த்தங்களைவிட கடலோரப் பாதுகாப்பு எல்லையை நூறுமீற்றராகப் பிரகடனப்படுத்தியது தொடர்பாகவும், அதனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவுமே கூடுதலான நேரம் விவாதிக்கப்பட்டது.

ஆளும் கட்சியினர் நூறுமீற்றர் எல்லையைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அதன்மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் அனர்த்தங்களைத் தடுக்கமுடியும் என்று வாதிட்டனர்.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தமட்டில் ஐக்கிய தேசியக் கட்சியும் முஸ்லிம் காங்கிரஸும் இதற்கு மாறாக வாதிட்டன.

ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்த நூறுமீற்றர் எல்லை விவகாரத்தை எதிர்க்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்படத் தக்கது.

ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான விவாதம் ஆழிப்பேரலையைப் போலவே கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், அது அமைதியாக அடங்கிப்போய்விட்டது.

வழமையாகவே நாடாளுமன்றத்தில் அடிக்கடி சூடேற்றிவிடும் ஜே.வி.பியினர் இந்த விவாதத்தில் கலந்துகொள்ளாததினால் சபை சோபை இழந்து காணப்பட்டது. அதாவது, புயலுக்குப்பின் ஏற்படும் அமைதியைப்போலவே சபை இருந்தது. சூடான வாதப்பிரதிவாதங்களும் அதிகம் இடம்பெறவில்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர்களான மஹிந்த விஜேசேகர, வஜிர அபேகுணவர்தன ஆகியோர் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மீனவர் சமூகமும், சுற்றுலாத்துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்றனர்.

கடலோரம் வாழ்ந்த மீனவர்கள் தமது படகுகளைத் தலையில் சுமந்துகொண்டு இருப்பிடம் செல்பவர்கள் அல்லர். அவர்களின் வீடுகளைக் கரையிலிருந்து தூரமாக அமைத்தால் கரையில் அவர்கள் விட்டுச்செல்லும் படகுகளையும், வலைகளையும் பாதுகாப்பது யார் என்றும் கேள்வியெழுப்பினார்கள். (க-8)




நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் 4ஆவது நிர்வாகசபை பதவி ஏற்பு வைபவத்தின் பிரதம விருந்தினராகக் க்லந்து கொண்ட யாழ்.றோட்டறிக் கழகத்தின் உபதலைவர் றோட்டேறியன் அ.பஞ்ச லிங்கம், கழகத் தலைவர் றோட்டேறியன் து.ரமணனுக்கு கழுத் துப்பட்டி அணிவித்துச் சின்னம் சூட்டுவதைப் படத்தில் காணலாம. (10-203)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 05 1987

உதிர்வு 12 02 2004



செல்வன்
**விஜயகுமார் அசோக்குமார் (வீமன்)**

*எம் அருகில் இருப்பதினால் மட்டும் போதாது*
*உம்மைக் கண்களால் காணாமல் - எம்*
*உள்ளங்கள் கனத்து நிற்கின்றன!*
*உறவுகள், கட்டிக்காத்து வளர்த்திட்ட*
*அற்புதங்கள் எல்லாம் ஆழமாக வாழ்வின்*
*மகுடத்தை அலங்கரிக்கின்றன*
*எம் ஆத்மாந்த கண்ணீரைக் காணிக்கையாக்கி*
*உங்கள் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.*

சுப்பர்மடம்,
பருத்தித்துறை.

பிரிவால் துயருறும்:
அன்புத் தந்தை, தாய், சகோதரர்கள்.

## கூட்டம்

வலிவடக்குபெப்12

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தலைவர் எம்.வேதாபரணம் தலைமையில் யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (10-86)

## பயிற்சி வகுப்பு

வலி.வடக்கு,பெப்.12

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தினால் மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.30 மணிக்கு அரியாலை ஆனந்த வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

ஆர்வமுள்ளவர்களை இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளன.(10-56)

## பாடசாலைக்கு கணனிகள்

தென்மராட்சி,பெப்.12

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்திற்கு ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியான இரு கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

கனடாவில் வதியும் கைதடி வாழ் மக்கள் இதற்கான நிதியினை வழங்கியிருந்தனர். (10-117)

## குடிதண்ணீர் கிணற்றை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

வலி.மேற்கு,பெப்.12

வட்டு.தெற்கு பேச்சி அம்மன் கோயிலடி குடிதண்ணீர் கிணற்றையும் தங்குமடத்தையும் புனரமைத்துத்தருமாறு பேச்சி அம்பாள் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் வலி.மேற்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப் படாமல் இருக்கின்ற கிணற்றை நூற்றுக் கணக்கான மக்கள் குடிதண்ணீருக்கும் பயன் படுத்துவதாகவும் தங்குமடத்தில் பயிர்ச் செய்கைகளின்போது விவசாயிகள் இளைப் பாறுவதாகவும் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் பிரதேச செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில தெரிவித்துள்ளனர். (10-175)

## சமய சந்நிதிகளில்

குடத்தனை,பெப்.12

பருத்தித்துறை தம்பசிட்டி பண்டாரி அம்மன ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 6மணிக்கு சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (10-78-202)

* * *

யாழப்பாணம்,பெப்.12

நல்லூர் ஆடியபாத வீதியில் அமைந்துள்ள ஸ்ரீபாலபரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம் பாகித் தொடர்ந்து 10நாள்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 8மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (10-203)

## சுகாதாரத் தொண்டர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடமையாற்றிய சுகாதாரத் தொண்டர்கள் அனைவரையும் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் இடம்பெறவுள்ளது.

ஒருங்கிணைந்த சுகாதார சேவைகள் செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சுகாதாரத் தொண்டர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-203)

***யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்***

**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்ட அறிவித்தல்**

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 13-02-2005 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணிக்கு அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அனைத்து பழைய மாணவர்களையும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்.

(41961)(46)

## 20 ஆம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 01 08 1901

இறப்பு 12 02 1985



அமரர்
**சூ.மோசஸ் செல்லத்துரை**

(புனித மடுத்தீனார் சிறிய குருமடம் புனித பத்திரிசியார் கல்லூரியில் இணைந்து 60 வருடங்கள் பணிபுரிந்தவர்)

ஈர் பத்து ஆண்டுகள் ஓடி மறைந்ததையா
நீர் பெற்ற மக்கள் உம்மை என்றும் மறக்கமாட்டார்
ஊர் மெச்ச வாழ்ந்து எம்மை வளர்த்தீரையா
யார் உமக்கு என்றும் நிகராவர்?

திருப்பலிகள்:-
காலை. 6.30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயம்.
காலை. 6.30 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமம்
காலை. 6.45 மணிக்கு கல்கிசை புனித அந்தோனியார் ஆலயம்

இவருடன் தொடர்புடைய குருக்கள், கன்னியர்கள் இவருக்காகச் செபிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

39, மத்தியுஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகளும் குடும்பத்தினரும்,
20, புனித சில்வெஸ்டர் வீதி,
கல்கிசை.

## கண்ணீர்த் துளிகளுடன்... முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 12-02-1982

மறைவு 25-01-2004

செல்வி
**சிங்கராசா ரேகா**

ஆண்டொன்று ஆனதம்மா!
ஆறவில்லை எம்துயரம்
பெற்றவர்க்கு ஒரு மகளாய்
பேரெழிலும் கொண்டவளாய்
மற்றவர்க்கு சிறுபெண்ணாய்
மனங்குளிர்ந்த ஒரு தங்கையாய்
கற்றது தான் போதாதா
காசு பணம் இல்லையா? - ரேகா
வாழ்வில் என்ன குறை உனக்கு? - நீ
வழிமாறிப் போவதற்கு?
உற்றவர்கள் துயருற உன்
உயிரை எமன் பறித்தானோ?
வற்றாத கங்கைபோல் வாய்விட்டுக் கதறியழ
ஆற்றுவார் யாருமின்றி தவிக்கின்றோம்
நாம் இங்கே!
ஓர் ஆறுதல் வார்த்தை சொல்வாயோ அம்மா!

பத்தமேனி,
அச்சுவேலி.

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா குடும்பத்தினர்.

(41890)


இன்று வெளியாகிறது! நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

பாரிஸ் குடும்பியின்
**கம்பிகள் ஊடாக**
30 வருட உண்மைச் சம்பவம்




நவீன இலக்கியத்தில் புதிய தரிசனம்!

ஜெயேந்திரன் எழுதிய
**கம்பிகள் ஊடாக**

நூல் வெளியீடு
**12-02-2005**
சனிக்கிழமை
மாலை **5.00** மணிக்கு

கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபம்
வெள்ளவத்தை

தொடர்புகளுக்கு: 011-2362240
0776910137

அனைவரும் அன்புடன் அழைக்கப்பெறுகின்றனர்.

வெளிநாட்டு ஆசை விபரீதம் ஆகியவரை.......
இப்புத்தகம் சகல ஐரோப்பிய நாடுகளிலும் கிடைக்கும்.

# நான்காம் கட்ட ஈழப்போருக்கான வாயில் திறக்கப்படுகின்றதா?

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருமான கௌசல்யன் என அழைக்கப்படும் இளையதம்பி லிங்கராஜாவும் மூன்று போராளிகளும் புனாணையில் வைத்து கடந்த திங்கட்கிழமை கொல்லப்பட்டனர்.



இந்தப் படுகொலை மூலம் நான்காம் கட்ட ஈழப்போருக்கு வழி திறக்கப்படுகின்றதா? கால்கோல் இடப்படுகின்றதா? என்பதே இன்று சகல மட்டங்களிலும் எழுந்துள்ள கேள்வியாகும்.

இந்தச் சம்பவத்தையடுத்து விடுதலைப் புலிகள் தரப்பில் கடும் சீற்றம் ஏற்பட்டுள்ள அதேநேரம், படைகள் தமது நிலைகளைப் பலப்படுத்துவதிலும் ரோந்துப் பணிகளை விஸ்தரிப்பதிலும் தீவிரம் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது.

இதன் பின்னணியில் யுத்தம் வெடிக்கும் சூழல் உருவாகுவதால் மக்கள் மனதில் நான்காம் கட்டப்போர் தொடர்பாகக் கேள்வி எழுவது நியாயம்தான்.

கிழக்கில் கடந்த வருடம் மார்ச், ஏப்ரல் மாதங்களின் கருணா குழுவுடன் இடம்பெற்ற மோதல்களின் தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் 18 இற்கும் மேற்பட்டோர் அவ்வப்போது கொல்லப்பட்டு வந்துள்ளனர். அதன் தொடர்ச்சியாகவே கௌசல்யனும் கொலை செய்யப்பட்டார் என சில தரப்புகளில் கூறப்படுகின்றது.

அந்தத் தகவல்களில் உள்ள முரண்பாட்டுத் தன்மையை மறுக்கும் வகையில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை விடுத்த அறிக்கை அமைந்திருந்தது.

விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் -

புனாணையில் போராளிகள் மீது இராணுவ மற்றும் பொலீஸ் சீருடை தரித்தவர்களே தாக்குதல் நடத்தியிருக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"சம்பவத்துக்குத் தங்கள் கடும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ள விடுதலைப் புலிகள், அரசியல் பணிக்காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினூடாகப் பயணித்த எமது போராளிகள் இரு இராணுவ முகாம்களுக்கு இடையேயுள்ள பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்டது. அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே எய்தப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்த விதிகளை இச்சம்பவம் கேள்விக்குறியாக்கியுள்ளது. சம்பவம் நடந்த இடம் மற்றும் சீருடை என்பன இக்கொலைகளில் அரச படைகளின் அனுசரணையைச் சுட்டிநிற்பவையாக அமைகின்றன.

"சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மனிதநேயப் பணிக்கும் தடைப்பட்டுப்போயிருக்கும் சமாதான முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கும் இச்சம்பவம் பெரும் பங்கம் விளைவிக்கக்கூடும் என நாம் அஞ்சுகின்றோம்" என்று தெரிவித்துள்ளனர்.

இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கு படைத்தரப்பின் ஆசீர்வாதம் இருந்ததைச் சுட்டிக்காட்டும் விடுதலைப் புலிகள், இதனால், எழப்போகும் அபாயநிலை குறித்து எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

சர்வதேச சமூகமும் நோர்வே அனுசரணையாளர்களும் இந்த விடயத்தில் தலையிட்டு நியாயமான தீர்வு ஒன்றை எட்டாவிட்டால் நிலைமை மோசமடைவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசம் அம்பாறையும் மட்டக்களப்புமேயாகும். அந்தப் பிரதேசத்தில் நிர்க்கதி நிலையில் உள்ள மக்களின் மறுவாழ்வுத் திட்டங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமையுடன் கலந்துரையாட கௌசல்யன் கடந்த 4 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வந்தார்.

மறுவாழ்வுத் திட்டங்கள் தொடர்பாக அபிவிருத்திக்கும் திட்டமிடலுக்குமான செயலகத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். சர்வதேச நாடுகளிலிருந்து வந்துள்ள பல்துறை சார்ந்த நிபுணர்களுடன் கலந்து திட்டங்களை இறுதியாக்கிக்கொண்டார்.

மறுநாள் வன்னி வந்த நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நடந்த சந்திப்பில் கௌசல்யனும் பங்கேற்றார். சந்திப்பு முடிந்து வெளியே வந்த அவருடன் கிழக்கு நிலைபற்றிக் கேட்டேன். வழமையான புன்முறுவலுடன் சிரித்தபடியே, கிழக்கு நிலைமையில் மாற்றமில்லை. ஸ்ரீலங்காப் படைகளுக்கு எதிரான போர், கருணாவுக்கு எதிரான போர், இப்போது சுனாமிக்கு எதிரான போர். எல்லாவற்றிலும் இன்னல் படுபவர்கள் எமது மக்கள்தான் என்று பதிலளித்தார் கௌசல்யன்.

எல்லோருடனும் கலகலப்பாகப் பேசும் அவரது சுபாவம்தான் அவர் கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்களின் மனங்களில் இடம்பிடித்ததற்குக் காரணம். கிழக்கில் காணி விவகாரத்தில் என்றால் என்ன, இனமுரண்பாடாகவிருந்தால் என்ன உடன் தலையிட்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதில் கௌசல்யன் முன்னின்று ஆற்றிய சேவைகள்தான் இளவயதினிலே முக்கிய பதவிகள் அவரைத் தேடிவரக் காரணமாகின.

### கொக்கட்டிச்சோலையில் பிறந்தவர் கௌசல்யன்

கொக்கட்டிச்சோலைப் பிரிவில் பாண்டியன்வெளி என்னும் கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பம் ஒன்றில் 1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி பிறந்தார் கௌசல்யன். அவரது தந்தையார் இளையதம்பி அவருக்கு இட்டபெயர் லிங்கராஜா.

ஆரம்பக் கல்வியை சொந்த ஊரில் உள்ள பாடசாலையில் மேற்கொண்டு வந்த அவர், 17 ஆவது வயதில் இந்தியப் படைகளின் கொடூரச் செயல்களால் நொந்துபோய் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய முடிவுசெய்தார்.

1989 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 28 ஆம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட அவர், குறுகிய காலப் பயிற்சியை முடித்துப் பல்வேறு சமர்களில் பங்குகொண்டார்.

சண்டையிடும் திறமையுடன் நிர்வாக விடயங்களிலும் கூடுதல் ஆர்வங்காட்டினார். இதையடுத்து அவருக்கு நிர்வாகப் பொறுப்பை வழங்கத் தலைவர் பிரபாகரன் முடிவுசெய்தார். அதன்படி, முதலில் 1990 இல் மட்டு. போராளிகள் பயிற்சிக் கல்லூரியின் நிர்வாகப் பணிகள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டன.

அதன்பின், 1993 முதல் 1994 வரை கிழக்கில் நிதிப் பிரிவுகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

கணக்கியல், கணக்காய்வுத் துறைகளில் அவர் அனுபவம் பெறுவதற் காக 1995 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் தலைமை அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்திருந்தது. ஒருவருடம் பயிற்சி பெற்றபின்னர் மீண்டும் மட்டக்களப்புக்குச் சென்ற அவர், நிதிப் பொறுப்பாளராக 2002 ஆம் ஆண்டுவரை பணி புரிந்தார்.

### 30 ஆவது வயதில் பொறுப்பேற்றார்

அதன்பின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பதவியைத் தனது 30 ஆவது வயதில் பொறுப்பேற்றார். கருணா குழுவுக்கு எதிராகச் செயற்பட்டு வன்னி வந்த அவர், கருணாவின் துரோகத்தனத்தைப் பகிரங்கப் படுத்தியிருந்தார்.

அரசியல் பொறுப்பாளர் பதவிவகித்த காலத்தில் அமைக்கப்பட்ட இராணுவம் - புலிகள் குழுவில் முக்கிய பங்குகள் வகித்தார். மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீராக்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் தனது பணியைச் சீராக முன்னெடுத்து வந்தார்.

அக்காலப்பகுதியில் தமிழ்ச்செல்வன் தலைமையில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற உயர்மட்ட அரசியல் குழுவில் அவரும் இடம் பெற்றிருந்தார்.

அரசடித்தீவைச் சேர்ந்த பட்டதாரிப் பெண் ஒருவருக்கும் இவருக்கும் திருமணம் கடந்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவிருந்த நிலையில், கருணா குழுவுடன் ஏற்பட்ட மோதல் காரணமாகக் குழம்பியது அவரது திருமணம்.

வன்னிக்கு வந்து அவர் தங்கியிருந்த போது அங்கு அழைத்துவரப்பட்ட அந்தப் பட்டதாரிப் பெண்ணுக்கும் அவருக்கும் திருமணம் அமைதியாக நடந்தேறியது. அந்தப் பட்டதாரிப் பெண்ணுக்கு அண்மையில்தான் ஆசிரிய நியமனமும் கிடைத்திருந்தது.

சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுப் பணிகளுக்கான திட்டங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமையுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்ட அவர், மக்களுக்கான பணிகளை உடன் ஆரம்பிக்கவேண்டும் என்ற நோக்குடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுமதிக்குக் காத்திராமல் 'பிக் அப்' வாகனத்தில் தமது சக போராளிகளுடன் திங்களன்று புறப்பட்டார்.

> "கிழக்கு நிலைமையில் மாற்றம் இல்லை. ஸ்ரீலங்காப் படைகளுக்கு எதிரானபோர். கருணா குழுவுக்கு எதிரான போர். இப்போது சுனாமிக்கு எதிரான போர். எல்லாவற்றிலும் இன்னல் படுபவர்கள் எமது மக்கள் தான்...."
>
> -கௌசல்யன்.

### கண்காணிப்புக்குழுவின் அனுமதியின்றிப் பயணம்

சாதாரணமாகக் கிளிநொச்சியிலிருந்து செங்கலடி கறுத்தப் பாலம் வரையான பகுதி ஊடாகச் செல்ல கண்காணிப்புக்குழுவின் அனுமதி பெற ஐந்து தினங்களுக்கு முன் விண்ணப்பிக்கவேண்டும் என்பது நடைமுறை.

அவசரமாகச் செல்லவேண்டியிருந்ததால் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அனுமதியைப் பெறாமலே கௌசல்யன் புறப்பட்டார்.

ஓமந்தை இராணுவச் சாவடியில் பதிவுகளை மேற்கொண்டு மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த கௌசல்யன் பொலன்னறுவைச் சந்தியில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேருவைச் சந்தித்தார். 'பிக் அப்'பைவிட்டு அவரின் 57 - 1020 'ஹை-ஏஸ்' வானில் சக போராளிகளுடன் ஏறிய கௌசல்யன் ஏ-11 பாதையில் மரதன்கடவல - வாழைச்சேனை வீதியில் சென்றுகொண்டிருந்தார்.

103 ஆம் மைலுக்கும் 104 ஆம் மைலுக்கும் இடையில் வான் சென்றுகொண்டிருந்தது. பிள்ளையாரடியில் இறங்கி பிள்ளையாரை வணங்கிவிட்டு வானில் ஏறி, வான் புறப்படத்தயாரானது.

அச்சமயம் அங்கு கிளைமோர்த் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதன்பின் வான் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டு துப்பாக்கிதாரிகள் வானுக்குள் இருந்தவர்களைத் தேடித்தேடிச் சுட்டனர். கௌசல்யனுக்கு அருகில் வைத்துச் சுடப்பட்டதால் அவரது முகம் சிதைந்தது. வவுனியாவிலிருந்து இவர்களைப் பின்தொடர்ந்துவந்த குழு ஒன்றே இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என்று ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

வெலிகந்த இராணுவ முகாமுக்கும் புனாணை இராணுவ முகாமுக்கும் இடைப்பட்ட பகுதியில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், படையினரின் அனுசரணையின்றித் தாக்குதல் இடம்பெற்றிருப்பதற்கான சாத்தியம் குறைவு என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்புக்குப் பெருகி

**குகா**

வரும் சர்வதேச ஆதரவைப் பொறுக்கமுடியாத சக்திகளே இத்தாக்குதலின் பின்னணியில் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

சமாதானச் சூழலை விரும்பாத சக்திகள், விடுதலைப் புலிகளை ஆத்திரப்படுத்தி, போருக்கு அழைக்கும் நோக்குடன் தாக்குதலைத் திட்டமிட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

அண்மைக்காலத்தில் கிழக்கில் விடுதலைப் புலிகளின் 18 பொறுப்பாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களைவிட மிக மோசமான தாக்குதலாகக் கௌசல்யன் மீதான தாக்குதலை விடுதலைப் புலிகள் நோக்குகின்றனர்.



பொலீஸ் பாதுகாப்பில் பயணம்செய்த வான்

இத்தாக்குதலின் பின்னரும் பொறுமை காக்கும் தமது போக்கை மறுபரிசீலனை செய்ய விடுதலைப் புலிகளின் தலைமை, முடிவு செய்யும் பட்சத்தில், நான்காம் கட்ட ஈழப்போர் தவிர்க்கமுடியாததாகிவிடும். காலந்தான் பதில் சொல்லவேண்டும். ❖

## நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு
## யாழ்ப்பாண மாநகர பிரதேச நீர் பாதுகாப்பு, சூழல் முகாமைத்துவத்திட்டம்
(நோர்வே அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டது)

# கேள்வி அறிவித்தல் - இல.02
# சிறுகுளங்களைப் புனரமைத்தல்

1. ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் பொருளாதார சுற்றுப்புற அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக நோர்வே அரசாங்கத்துடனான ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் மேற்படி திட்டத்திற்கான நிதி இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட சிறு குளங்களைப் புனரமைக்கும் வேலைகளுக்காக பகிரங்க கேளவிகள் இத்தால் கோரப்படுகின்றது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராக குறிப்பிடப்படும் நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு செயலாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் அவர்களால் மூடி, பொறிவைக்கப்பட்ட கேள்விகள் இக்ராட் ஒப்பந்தக்காரரிடமிருந்தும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.
3. கேள்விப் பத்திரங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்விக்கும் ரூபா 590/- படி பணமாக செலுத்திப் 14.02.2005இல் இருந்து 25.02.2005 பிற்பகல் 15.00மணிவரை வேலை நேரங்களில் மேறபடி "நோராட்" அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒரு ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் "நோராட்" வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலைய்ய பொறுப்பேற்பவர் போதயளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும். மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கையினால் அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தினைக் கொண்டிருத்தல் ஆகாது.
6. கடந்த காலங்களினுள் ஆகக்குறைந்தது இருஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும். இது தொழில் தருநர்களிடமிருந்து/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றும் தரப்படல் வேண்டும்.
7. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் இலவசமாகப் பார்வையிட்டு மேலதிக விவரங்களை *"நோராட்" அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணத்தில* பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல. 021 222 6752.
8. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் யாவும் அவை திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல்வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணைப்பத்திரமும் இணைக்கப்பட்டு, *"மாவட்ட செயலாளர்/அரசஅதிபர், மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்குத் தனித்தனி உறைகளில் இடப்பட்டு 28.02.2005 ஆம் திகதி திங்கட்கிழமை நணபகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக, இரு பிரதிகளாக அனுப்புதல் வேண்டும். இதறகென அலுவலகத்தில் புனர்வாழ்வுப் பகுதி கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலும் இடப்படலாம். கேள்விப் பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேளவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.
9. அதே தினம் 15.00 மணிக்குக் கேள்விகள் யாவும் அரசாங்க அதிபர் முன்னிலையில் திறக்கப்படும். கேளவிதாரர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளிக்கலாம்.
10. கேள்வி கோருவோருக்கு இதன்போது ஏற்படும் ஆகு செலவுகளுக்கு தொழில் தருநர் பொறுப்புடையவர் ஆகார்.

## விவர அட்டவணை

| இல | வேலையின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் பதிவு செய்யப் பட்டுள்ள ஆகக் குறைந்த தரம் | மீளளிக்கக் கூடிய கேள்விப்பத்திரப் பிணை வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப் படாத பணம் வற்வரி உட்பட (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | பண்டாரக் குளம், நல்லூர் (JPO/WC/PO/1/33) | 09 | 17,250.00 | 590.00 |
| 2 | மக்கியாகுளம், கொழும்புத்துறை மேற்கு (JPO/WC/PO/1/42) | 09 | 16,800.00 | 590.00 |
| 3 | நாயன்மார்கட்டுக்குளம், நல்லூர் (JPO/WC/PO/1/34) | 09 | 12,400.00 | 590.00 |
| 4 | இலந்தைக்குளம், கொழும்புத்துறை மேற்கு (JPO/WC/PO/1/06) | 09 | 19,100.00 | 590.00 |
| 5 | சின்னக்குளம், கொழும்புத்துறை கிழக்கு (JPO/WC/PO/1/02) | 09 | 15,300.00 | 590.00 |
| 6 | வண்ணாங்குளம், சுண்டுக்குளி (JPO/WC/PO/1/07) | 09 | 12,000.00 | 590.00 |
| 7 | பிள்ளையார் கோயில் குளம், சுண்டுக்குளி (JPO/WC/PO/1/32) | 09 | 6,500.00 | 590.00 |
| 8 | வீரமாகாளி அம்மன்கோயில் குளம், நல்லூர் (JPO/WC/PO/1/29) | 09 | 7,700.00 | 590.00 |
| 9 | பிரப்பன்குளம், அரியாலை மேற்கு (JPO/WC/PO/1/35) | 09 | 12,300.00 | 590.00 |
| 10 | வண்ணான் குளம், திருநெல்வேலி. (JPO/WC/PO/1/22) | 09 | 12,800.00 | 590.00 |

**க.கணேஸ்,**
தலைவர்,
மாவட்டக் கேள்விச் சபை,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

*மாவட்ட செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*12.02.2005*

(C/40905)(42-18-19)

## 'பிறைற்' நிறுவனம் உதவி

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவுவதற்காக 'பிறைற்' புத்தக நிலையத்தினால் குறிப்பிட்ட தொகைப் பாடசாலைப் பயிற்சி நூல்கள் தமிழீழக் கல்விக் கழகத்திடமும், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடமும் கையளிக்கப்பட்டுள்ளன.

மேலும், ஒரு தொகை நூல்களைப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்க 'பிறைற்' நிறுவனத்தினர் தீர்மானித்துள்ளனர்.

(க-8)

## உயிரிழந்தவர்களுக்கு வடமராட்சியில் ஆத்மசாந்தி வேண்டி வழிபாடுகள்

குடத்தனை, பெப்.12

சுனாமி இயற்கையனர்த்தத்தால் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில், நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை லட்ச சங்காபிசேகமும், லட்சார்ச்சனையும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி 108 சிட்டி விளக்குகள் ஏற்றி விசேட பூசையும் இடம்பெறும். (8-78-202)

★ ★ ★

கரவெட்டி,பெப்.12

சுனாமி இயற்கையனர்த்தத்தால் இறந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டியும், பாதிப்புற்றவர்களின் நலன் வேண்டியும், மீண்டும் இயற்கையனர்த்தம் ஏற்படாதிருக்கப் பிரார்த்தித்தும் விசேடபூசை வழிபாடுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளன.

இவ்வழிபாட்டில், 109 தீபங்கள் ஏற்றி சண்முக அர்ச்சனையும் இடம் பெறவுள்ளது. (8-70-202)

## பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க 742 கோடி ரூபா நிதி திறைசேரி ஒதுக்கீடு

கொழும்பு,பெப்.12

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கென திறைசேரி ரூபா 742 கோடி நிதியை ஒதுக்கீடு செய்யத் தீர்மானித்துள்ளது.

இநத நிதியை பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் அரச் அதிபர் ஊடாக செலவழிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கடந்த புதன்கிழமை அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையின் போது பாதிக்கப்பட்ட மக்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவரும் பொருட்டும், அவர்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை வழங்கும் பொருட்டும் இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசினால் 5ஆயிரம் ரூபா, வாராந்தம் 375 ரூபா, மரணித்தவர்களுக்கு 15ஆயிரம் ரூபா மரணச செலவுப்பணம் என உதவிகள் வழங்கப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(க-8)

## இலங்கை-இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தத்தை விரைவுபடுத்துமாறு கோருகிறார் கதிர்காமர்

### பாகிஸ்தான் ஊடகத்துக்குப் பேட்டி

இஸ்லாமாபாத்,பெப்.12

இலங்கை - இந்தியா இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் கூடிய விரைவில் கைச்சாத்திடப்படவேண்டும் என்று இந்தியாவிடம் வலியுறுத்தியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர்.

அடுத்த மாத இறுதியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் கதிர்காமர் இப்படித் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுத் தகவல் பரிமாற்றம், இலங்கைப் படையினருக்கு இந்திய இராணுவப் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி போன்ற விடயங்களை உள்ளடக்கிய உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தத்திற்குப் பல தரபபிலுமிருந்து எழுந்த எதிர்ப்பை அடுத்து அந்த முயற்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் இப்போதைக்குக் கைச்சாத்திடப்படாது என்று தனது கூட்டணி அரசிலுள்ள தமிழகக் கட்சிகளுக்குப் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்துள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதி சந்திரிகாவுடன் பாகிஸ்தானுக்கு சென்றிருந்த கதிர்காமர் அங்கு அந்நாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

( க-8)



# தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழ்க் கைதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விடுதலை

யாழ்ப்பாணம், பெப்.12

கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட தமிழ்க் கைதி ஒருவர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் நேற்றுமுன்தினம் விடுதலைசெய்யப்பட்டார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சண்முகசுந்தரம் ரகுபதி என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டார்.

1990 ஆண்டு காரைநகரிலுள்ள இராணுவ முகாமில் இருந்த இராணுவத்தினரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

2003 ஆம் ஆண்டு இவருக்கு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய தூக்குத் தண்டனையை விதித்திருந்தார்.

பின்னர் மேன் முறையீட்டு நீதிமன்றில் முறையிடப்பட்டு இவரது தரப்பில் சட்டத்தரணிகளான றஞ்சித் பெர்னாண்டோ, அப்பாத்துறை விநாயகமூர்த்தி ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

இவரது தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகளின் வாதங்களை ஆராய்ந்த நீதிபதி காமினி அபயரட்ண இவரை விடுதலை செய்துள்ளார். (த-13)

# கூட்டுறவுச் சங்கத்தின் சுயதொழில் கடன்மூலம் 148 பயனாளிகள் நன்மையடைந்துள்ளனர்

## யாழ்.ப.நோ.கூ. சங்கத் தலைவர் தகவல்

அரியாலை,பெப்.12

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (யு.என்.டி.பி.) உதவியுடன் சுயதொழில் சுழற்சி முறையிலான கடன் வழங்கும் திட்டத்தில் இதுவரை 148 பயனாளிகள் நன்மையடைந்துள்ளனர் என சங்கத் தலைவர் சூ.சிறில் தெரிவித்தார்.

கோழிவளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கடற்றொழில், போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மேற்கொள்ளும் சுயதொழில், ஊனமுற்றோர் மேற்கொள்ளும் வேலைத் திட்டம் போன்றவற்றிற்கு இந்தக் கடன் வழங்கும் திட்டத்தை சங்கம் தனது கிராமிய வங்கி மூலம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கடந்த 2003 டிசெம்பர் மாதம் தொடக்கம் 2004 டிசெம்பர் மாதம் வரை 148 பயனாளிகள் இதில் நன்மையடைந்திருப்பதாகவும் இதற்காக 22 லட்சம் ரூபா நிதி மேற்படி சுயதொழில் திட்டத்திற்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் சங்கத்தலைவர் தெரிவித்தார்.

சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இந்தச் சுழற்சி முறையிலான கடன் வழங்கும் திட்டத்தில் முதலில் 10 ஆயிரம் ரூபா சுயதொழிலை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்டது. இந்தக் கடனை முற்றாகச் செலுத்திய பயனாளிகளுக்குப் பின்னர் 25 ஆயிரம் ரூபா சுயதொழிலை மேற்கொள்வதற்கு வழங்கப்படும்.

அத்துடன், கிராமிய வங்கியில் நிலையான வைப்புச் செய்தவர்களுக்கு 90 வீத கடன் வழங்கும் திட்டமும் நடைமுறையில் உள்ளது. மேற்படி சங்க கிராமிய வங்கிமூலம் நடைமுறைப்படுத்தப்படும் இந்தச் சுயதொழில் ஊக்குவிப்பு கடன் வழங்கும் திட்டத்தினால் சுயதொழிலை மேற்கொள்ளும் பயனாளிகள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (8-17)

# யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் விரைவில்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடத்தப்படும் வெளிவாரிப் பரீட்சைகள் விரைவில் நடத்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

க.பொ.த. (உயர்தரம்) 2001 மற்றும் 2002 அம ஆண்டிற்குரிய மாணவர்களுக்கான கலை முதற்தேர்வு, வணிகமுதற்தேர்வு ஆகிய பரீட்சைகளும், 2002 ஆம் ஆண்டிற்குரிய வணிகமாணி பகுதி I, வணிகமாணி பகுதி II வணிகமாணி பகுதி III ஆகிய பரீட்சைகளும் நடை பெறவுள்ளன.

அநேக மாணவர்கள் யாழ்.பல்லைக்கழக மக்கள வங்கிக் கிளையில் 50 ரூபாவைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று அதனை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து பரீட்சைகளுக்கான விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று, பரீட்சைக்கு விண்ணப்பித்து வருகின்றனர்.

இம்மாதம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு வெளிவாரிப்பட்டப்பதிவுகள் பரீட் சைகள் அலகின் உதவிப் பதிவாளர் கேட்டுள் ளார்.

இதேவேளை -

மீள் பரீட்சார்த்திகள் தமது பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகிய பின்னர் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் எனவும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினதும் கல்வித்தகைமைச் சான்றிதழினதும் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்காதவர்கள் அவற்றை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறும் - அவர் கேட்டுள்ளார். (த-12)

# இயற்கையின் வழி எம்முடன் பேசும் இறைவன்

**தவக்காலச் சிந்தனை**

எமது துன்ப, துயரங்கள் தேவைகளின்போது இறைவா! இறைவா! என்று குரலெழுப்புகின்றோம். அவ்வேளைகளில் இறைவன் எமக்குச் செவிசாய்க்கவில்லை, எம்மோடு பேசவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கின்றோம். மனத்தளர்வுகொள்கின்றோம்.

யாக்கோபு, ஈசாக்கு வழியாக நம் முன்னோரோடு பேசிய இறைவன் இறைவார்த்தை வழியாகவும் மறை அறிவிப்பாளர் ஊடாகவும் இறைவன் இன்னும் எம்மோடு பேசிவருகிறார். இயற்கையும் இறைவன் எம்மோடு உரையாடும் ஒரு வடிவமே. இதற்கு சிறந்த உதாரணம் சுனாமிப் பேரலை. இந்த அனர்த்தம் பல யதார்த்தங்களை எமக்கு உணர்த்தியுள்ளது.

இறைவன் எம்மோடு பலர் வழியாக உரையாடுகிறார் என்பதற்குச் சான்று கூறும் ஓர் உண்மைச்சம்பவம் - முல்லைத்தீவு புனித பேதுரு வானவர் ஆலயத்தில் பிரதி ஞாயிறு திருப்பலி நடைபெறுவது வழக்கம். ஆனால், வழமைக்குமாறாக மூன்று மைல் தொலைவில் உள்ள புனித சூசையப்பர் சிற்றாலயத்தில் திருவிழாப் பலிபூசை 26 ஆம் திகதி இடம்பெறும் எனப் பங்குத்தந்தை ஏற்கனவே அறிவித்திருந்தார். அதற்கமைய பல்லாயிரக்கணக்கான அக்கிராம மக்கள் ஞாயிறு காலை அங்கு சென்றுவிட்டனர். பேரலை தாக்கியது, பலர் காவுகொள்ளப்பட்டனர். ஆலயம் தரைமட்டமானது. இறைவனின் குரலைக் கேட்டு ஆலயத்திருவிழாவுக்கு சென்றிருந்த 3 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் தப்பித்துக்கொண்டனர்.

இறந்தோர் அனைவரும் பாவிகள் என்றல்ல. சிலவேளைகளில் அவர்கள் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக இருந்திருக்கலாம்.

இந்த அனர்த்தத்தில் இருந்து தப்பியோரும் ஏனையோரும் தூய்மையானவர்கள் என்றுமல்ல.

**நான்காம் நாள்**

வாழ்ந்துகொண்டிருக்கும் நாம், திருந்தி நேர்வழியில் வாழ இறைவன் எமக்கு மீண்டும் ஓர் சந்தர்ப்பம் தந்துள்ளார். இந்த உண்மையை உணர்ந்தவர்களாக தேவனின் அழைப்பும் அவரது குரலும் பலர் வழியாக எம்மை வழி நடத்துகிறது என்பதை ஏற்றுத் துன்பங்கள், இழப்புக்களைக் கண்டு துவண்டுபோகாது இயேசு வீழ்ந்து மீண்டும் உறுதியுடன் எழுந்து நடந்தது போல் எமது ஆன்மீக வாழ்வின் இலக்கை நோக்கி நடைபோடுவோம்.

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை.

# நூல்வரிசை




**நூல்கள்:** வாழ்க அன்னை, சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள்.
**வெளியீடு:** சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் அறநிதியச் சபை.

தெல்லிமாநகரிலே பிறந்து துர்க்காதேவி அன்னையின் அருட்கடாட்சத்தால் நிலையற்ற இந்த மானிட வாழ்வில் தன்னால் எவ்வளவு பணிகளை ஆற்றமுடியுமோ அவ்வளவு பணிகளை ஆற்றி, சகலரிடத்தும் அன்பையும் பெருமதிப்பையும் பெற்ற அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் முத்து விழா கடந்த மாதம் 7ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

அன்னையின் முத்துவிழாவை முன்னிட்டு பிறந்தநாள் அறநிதியச் சபையினர் 'வாழ்க அன்னை' என்று அன்னையை வாழ்த்தி, அகிலம்வாழ் ஆன்றோர்களின் வாழ்த்துச் செய்திகள் யாவற்றையும் தொகுத்து ஓர் அழகுறு நூலும், இறைவனாலேயே தோழனாகக் கருதப்பட்டு திருத்தொண்டர் தொகை என்ற ஒப்பற்ற பேரிலக்கியத்தைத் தந்த சுந்தரமூர்த்தி நாயனாரின் 7 ஆம் திருமுறைகளைத் தொகுத்து "சுந்தரமூர்த்திநாயனார் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள்" என்ற ஒப்பற்ற உயர்ந்த பயனுறு நூலும் ஆக இரு நூல்களை வெளியிட்டுள்ளனர்.

'வாழ்க அன்னை' என்ற நூலிலே அன்னையினுடைய அகவை 80 வடிவத்தை இலக்கத்திலே இட்டு எட்டின், மேல் வட்டத்திலே உலகம் யாவையும் தாமுளதாகக்கொண்ட பூமாதேவியையும் கீழ்வட்டத்திலே பூமாதேவியால் சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தையும் எண்பதின் 'சைவர்' வட்டத்திற்குள் உலகிலே களங்கமில்லா நிறைவாழ்வு வாழ்ந்த அன்னையின் மாசில்லா அழகுறு தோற்றப்பொலிவுடைய படத்தினையும் இந்த உலகம், இறைவன், அன்னை யாவையும் தெல்லி நகர்ப்பதியிலே உறையச்செய்த தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் இந்த 80 ஐத் தாங்கி நிற்பதுபோல் அழகுமிகு அட்டைப் படத்தைத் தனதாக்கிக்கொண்டு வெளிவந்துள்ளது 'சிவத்தமிழ்' என்ற நூல்.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களின் வெளியீட்டுரையிலேயே சேக்கிழார் சுவாமிகளால் இயம்பப்பட்ட "மாசு இல்லாத மணி திகழ் மேனிமேல் பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்..." என்ற பாடலைக் குறிப்பிட்டு ஆரம்பிக்கிறார். இந்த நூலிலே இப்பாடல் இடம்பெற்றிப்பது சாலப் பொருந்தும்.

ஆசிரியர் ஆறு.திருமுருகன் அவர்கள் திருமூலசுவாமிகள் கூறிய "பேரறியாப் பெருஞ் சுடர் ஒன்று அதன் வேரறியாமை விளம்புகின்றேன்" என்று குறிப்பிட்டு அன்னையின் பெருமைகளை ஆயிரம் ஆயிரம் நூல்கள் வெளியிட்டாலும் சொல்லில் அடங்காது. எழுத்துக்களால் வடிக்கமுடியாது என்று குறிப்பிடுகின்றார். மேலும் அன்னை பெற்ற பாராட்டுக்கள், அன்னையால் ஆற்றப்படுகின்ற சேவை என்பன பற்றி மிகவும் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆசியுரைகளை துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், மாவை ஆதீனம் மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள், ஈழத்துச் சிதம்பரம் க.வைத்தீஸ்வரக் குருக்கள், துர்க்கா தேவி தேவஸ்தான உதவி சிவாச்சாரியார் சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், பிரமஸ்ரீ விஸ்வநாராயணசர்மா ஆகியோர் வழங்கியுள்ளனர். திருவாவடுதுறை ஆதீன 23 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், மதுரை ஆதீனம் 292ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், யாழ்.தென்னிந்தியத் திருச்சபை பேராயர் அதி வண.டாக்டர் எஸ்.ஜெபநேசன், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் பல பெரியோர்களின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றுள்ளன.

✪ ✪ ✪

நூலின் இறுதியில் அன்னையின் வாழ்க்கைக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

மக்கள் மத்தியிலே அருகி வருகின்ற திருமுறைகளின் பெருமைகளை மேலோங்கச் செய்யும் பெருநோக்குடன் சுந்தரமூர்த்திநாயனாரால் அருளப்பெற்ற 7ஆம் திருமுறையைத் தொகுத்து அனைவரும் பயன்பெறும் வண்ணம் வெளியிட்டுள்ளார்கள் சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபையினர். நூலின் அட்டைப்படம் துர்க்கா தேவி தேவஸ்தானத்தையும் சுந்தரமூர்த்தி நாயனாரையும் அன்னையையும் கொண்டதாக அழகுறு வண்ணமாகக் காணப்படுகிறது. உள்ளே அன்னையின் 'எனது உரை' என்ற பகுதி இடம்பெற்றுள்ளது. இந்தப் பகுதியில் தடுத்தாட்கொண்ட வரலாறு முதல் சுந்தரர் செய்த அற்புதங்கள் சுந்தரருக்கும் இறைவனுக்குமுள்ள தோழமைத் தொடர்பு என்பன பற்றியும் திருமுறைகளின் பெருமை, சிறப்பு மற்றும் அவற்றைத்தான் விரும்பிக் கற்ற காரணம் என்பன பற்றியும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி குறிப்பிட்டதிலிருந்து அனைவரையும் நூலைப் விரும்பிப் படிக்க உந்துவதாக இருக்கின்றது.

வித்துவான் வசந்தா வைத்தியநாதனின் 'சுந்தரத் தமிழ்' என்ற அணிந்துரை இடம்பெற்றுள்ளது. இந்த அணிந்துரையும் சுந்தரரால் பாடப்பட்ட தமிழாகிய சுந்தரத் தமிழை சுந்தரம் சேர்த்து - அழகு சேர்த்து - வழங்குவதாய் அமைந்துள்ளது. சுந்தரரது தேவாரத்தில் வருகின்ற அழகுறு சம்பவங்கள் பல இவரது அணிந்துரையில் எடுத்து ஆராயப்படுகின்றன.

இவ்விரு நூல்களும் தமிழ்கூறும் நல்லுலகிற்குக் கிடைத்த இருபெரும் பயனுள்ள பொக்கிஷங்கள் என்று குறிப்பிடலாம்.

தெல்லியூர் சி.ஹரிகரன்.



**நூல்:** ஆஸ்துமாவுடன் வாழ்தல்
**ஆசிரியர்:** டாக்டர் ரீ.பேரானந்தராஜா
**வெளியீடு:** மருத்துவ சங்கம், மாவட்ட வைத்தியசாலை - கிளிநொச்சி.

மருத்துவத் துறையைப் பொறுத்தவரை "வருமுன் காப்பதே" சிறந்த மருத்துவமாகும். அதாவது, நோய் தொற்றிய பின் சிகிச்சையளிப்பது என்பதை விட நோய் தோன்றுவதற்கு முன்னரே அது தோன்றுவதற்கு ஏதுவான காரணிகளைக் கண்டறிந்து அவற்றிற்குரிய பரிகாரங்களைத் தேட வேண்டும்.

மருத்துவத் துறையில் தேடல் என்பது முயற் கொம்பு போன்றதே. ஏனெனில், இத்துறை சார்ந்த புத்தகங்கள், வெளியீடுகள், சஞ்சிகைகள் என்பன ஆங்கிலம் உட்பட வேற்று மொழிகளிலேயே வெளிவருகின்றன. எமது மக்கள் இவ்வாறான புத்தகங்கள், வெளியீடுகள், சஞ்சிகைகள், விவரணங்கள் ஊடாக மருத்துவ அறிவைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது மிகக் கடினமானதே. அத்துடன், தமிழ்ப் பிரதேசங்களில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதால் வைத்தியர்கள் ஊடாக மருத்துவ அறிவை பொதுமக்களிற்குப் புகட்டுவதும் சிரமமானதே. இவ்வாறான கடினமான சூழ்நிலையில் மருத்துவம், நோய்கள் சம்பந்தப்பட்ட வெளியீடுகள் தமிழில் வெளிவருவதே மிகச் சிறப்பானது. இவ்வகையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ரி.பேரானந்தராஜாவின் முயற்சியூடாக வெளிவந்துள்ள "ஆஸ்மாவுடன் வாழ்தல்" என்ற மருத்துவ நூல் எல்லோரும் வாசித்துப் பயனடையக்கூடிய வகையில் கையடக்கமான விரைணப்படங்களோடு எளிய மொழி நடையில் கிளிநொச்சி மருத்துவ சங்க வெளியீடாக வெளிவந்துள்ளது.

நோய் பற்றி சகல விடயங்களும் இரத்தினச் சுருக்கமாக ஆசிரியர் தனக்கேயுரிய பாணியில் நயம்பட எழுதியுள்ளார். இங்கும் ஆஸ்துமா நோயாளிகள் நோயின் கடுமையால் அவஸ்தைப்படுகின்ற சந்தர்ப்பங்களைத் தவிர்த்து, நோய் வருமுன் காப்பதற்குரிய விடயங்கள், ஆஸ்துமாவிற்குப் பாவிக்கப்படுகின்ற மாத்திரைகள், பம்பிகள், உறிஞ்சிகளைப் பாவிக்கும் முறை என்பன மிகவும் விரிவாக விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

மொத்தத்தில் "ஆஸ்துமாவுடன் வாழ்தல்" என்ற இவ் மருத்துவ கைந்நூல் தமிழ்மொழி மூலமான மருத்துவ நூல்கள் வரிசையில் தனக்கெனத் தனியிடம் பிடித்துள்ளது.

இந்நூலை எழுதி உருவாக்கிய பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ரி.பேரானந்தராஜாவும் இவ்வாறான புத்தகங்கள் வெளியிடவேண்டும் என்ற உயரிய நோக்கில் செயற்படுகின்ற கிளிநொச்சி மருத்துவச் சங்கமும் பாராட்டுக்குரியவர்கள்.

வைத்திய கலாநிதி மனோமோகன்
இருதய சிகிச்சை நிபுணர், ஆஸ்திரேலியா.

# கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் பணியாற்றிய 3ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம்

காரைதீவு,பெப்.12

நாட்டிலுள்ள கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக மூன்று வருடகாலம் சேவையாற்றியோர் நிரந்தர நியமனம் பெறவிருக்கின்றனர்.

இந்த முடிவு அரச தரப்பில் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. கல்வியமைச்சுக்குச் சமர்பபித்த பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து இந்நியமனங்கள் வழங்கப்பட உள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதமளவில் சுமார் 3 ஆயிரம் பேருக்கு இந்த நிரந்தர நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

2004 ஜனவரி முதலாம் திகதி வரை கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் தொடர்ச்சியாக 3 வருடகாலம் சேவையாற்றிய 18-45 வயதுக்குட்பட்ட தொண்டர் ஆசிரியர்களே நிரந்தர நியமனத்திற்கு உள்ளீர்க்கப்படவிருக்கின்றனர் எனத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரசார செயலாளர் வி.ரி. சகாதேவராஜா கல்வியமைச்சின் உயரதிகாரியின் உறுதிமொழியை மேற்கோள்காட்டி அறிவித்துள்ளார்.

3 வருட சேவையை அந்தந்த மாகாணக் கல்வியமைச்சு உறுதிப்படுத்த வேண்டுமென்பது நியதியாகும்.

மார்ச்சில் நிரந்தர நியமனம் வழங்கப்படுகின்றபோது முதல் நியமனம் குறிப்பிட்ட நபர் கடமையாற்றிய பாடசாலையிலேயே வழங்கப்படுமென்று கூறப்பட்டுள்ளது.

(க-8)

## தேவை

எமது நிறுவனத்திற்கு விற்பனையாளராகப் பணிபுரிவதற்குப் பணியாள்கள் (ஆண், பெண்) தேவை. ஆர்வமுள்ளவர்கள் 15.02.2005ஆம திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். (யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

நிர்வாகி,
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2222573

(சி-40904) (21-19-18)

# வடக்கு - கிழக்கை....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் சமர்ப்பித்தார் அவர்.

அந்தக் காசோலையை வாங்கிப் பார்த்த அமைச்சர் சுமேதா ஜயசேன அதற்குப் பதில் அளிக்க முடியாமல் வாயடைத்துப் போனார்.

### கருஜயசூரிய ஆலோசனை

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் அரசுக்கு ஆணித்தரமாக சில விடயங்களைச் சுட்டிக் காட்டினார்.

நாட்டிற்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் இந்த நாடு அழிவதற்கு இடம்கொடுக்காது. ஆனால், அரசின் வேலைத் திட்டங்கள் நேர்மையானவையாக அமையவேண்டும். ஆழிப்பேரலை இந்த நாட்டில் அனைத்து இனமக்கள் மத்தியிலும் மனித நேயத்தையும் ஐக்கிய உணர்வையும் ஏற்படுத்திவிட்டது. ஆனால், அந்த ஐக்கியத்தைக் குலைத்து விடக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கரு ஜயசூரிய ஆலோசனை கூறினார்.

அமைச்சர் மங்கள சமரவீர இந்தச் சபையில எமது கட்சி உறுப்பினர்கள் மூவர் மீதுகுற்றச் சாட்டுக்களைச் சுமத்தினார். ஆனால், நான் அவரது நிலைக்குச் செல்ல விரும்பவில்லை.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டவுடன் பிரதமருடனும், அரசுடனும் இணைந்து அனர்த்தப் பணிகளில் உடனடியாகவே ஈடுபட்டோம்.

அதேபோன்று, ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட தேசிய இடர்நிவாரணப் பணிக்குழுவிலும் ஜனாதிபதியுடன் இணைந்து மங்கள விளக்கேற்றினோம். அந்த ஆதரவையும், ஒத்துழைப்பையும் நாம் நீக்கிக் கொள்ளவில்லை.

இடர் நிவாரணம் தொடர்பாக ஜனாதிபதியினால் கூட்டப்பட்ட அனைத்துக் கூட்டங்களிலும் கலந்துகொண்டு எமது ஆலோசனைகளை வழங்கியுள்ளோம்.

ஆனால், இன்றுவரை வீடமைப்புத் தொடர்பாகத் தெளிவான ஒரு கொள்கை அரசுத் தரப்பினால் வெளியிடப்படவில்லை.

முற்றாக அழிக்கப்பட்ட வீடுகளுக்கு எவ்வளவு தொகை, பாதி சேதமாக்கப்பட்ட வீடுகளுக்கு எவ்வளவு தொகை வழங்கப்படவுள்ளது என்று தீர்மானிக்கப்படவில்லை.

குடும்பத்தலைவர்களையும், உழைப்பாளிகளையும் இழந்த குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் முதல் ஒன்றரை லட்சம் ரூபாவரையாவது வழங்கப்படவேண்டும்.

உயிரிழந்தவர்களுக்கு 15ஆயிரம் ரூபாவும், பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டதாக அரசு கூறுகின்றது. ஆனால், எல்லாப் பகுதிகளுக்கும் இது கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. எனவே, அரசு உடனடியாக பரிசீலனை செய்து இந்தக் கொடுப்பனவுகளைத் துரிதப்படுத்தவேண்டும்.

தமது உடைமைகளை எல்லாம் இழந்து தொழில் செய்ய முடியாத நிலையில் இருக்கும் மீனவர்களுக்கு காலம் கடத்தாமல் மீன்பிடிப் படகுகளையும், வள்ளங்களையும் வழங்கவேண்டும் எனவும் கருஜயசூரிய வேண்டுகோள் விடுத்தார்.

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

அரச தரப்பில் இறுதியாக உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவு வழங்கவேண்டும் எனக் கோரினார். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எந்தவிதமான பாகுபாடும் இன்றி நிவாரண உதவிகள் வழங்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார். (க-8)

## தலைமைத்துவப் பாசறை

யாழ்ப்பாணம்,பெப்.12

,கியூடெக் சமாதான உயிர்ப்பூட்டல் குழுவினரால் ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரி விடுதி மாணவர்களுக்கு முழுநாள் வதிவிடத் தலைமைத்துவப் பாசறை நடத்தப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் அருட்திரு. எஸ்.யேசுதாசன் தலைமையில் 'நெருக்கீட்டை எதிர்கொள்ளுதலும் வன்முறையற்ற முறையில் முரண்பாடுகளைத் தீர்க்கும் வழிகளில் ஆற்றல் வெளிப்பாடுகளைத் தற்கால சூழலுக்கேற்ப இளையோரை வழிப்படுத்தல்' என்னும் கருப்பொருளில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் இந்தப் பாசறை இடம்பெறவுள்ளது.

(8-202-190)

## வவுனியாவில் அலுவலகத்துக்கு இடம் தேவை

வவுனியா நகர மத்தியில் 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் அலுவலகத்திற்கு இடம்தேவை.

(சி-40915)

தயவுசெய்து தொடர்புகொள்க:
திரு.சுரேஸ் 0777 283824
திரு.சுதாஸ் 071 4114991

## மரண அறிவித்தல்

### திருமதி சிதம்பரநாதன் வள்ளியம்மை

இடைக்குறிச்சி கிழக்கு, வரணியைச் சேர்ந்த திருமதி சிதம்பரநாதன் வள்ளியம்மை 09-02-2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதன் அவர்களின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13-02-2005) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சூரியன்திடல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைக்குறிச்சி கிழக்கு,
வரணி. (41984)(26-14-17)

தகவல்:
S.ஆறுமுகம் (அண்ணன்).

# எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின்
# மூன்றாவது ஆண்டு நிறைவு நினைவு அஞ்சலி!

மலர்வு 14.04.1947

உதிர்வு 17.01.2002



மண்கும்பான்-உயர்குடித் தோன்றல்

அமரர்

ஐயம்பிள்ளை நடராசா

உரிமையாளர், மைதிலி ஜுவலறி

**திதி: 12.02.2005**

அன்புத் தெய்வமாய் அவனியிலே வலம் வந்தீர்
என்றும் எங்களுடன் இணைந்தே வாழ்ந்திருந்தீர்
துன்பம் எம்மை வாட்டத் தூரதேசம் போனீரோ?
இன்று உமை நினைத்து இதய அஞ்சலி செய்கிறோம்.

குடும்பத்தின் ஒளிவிளக்காய் ஒளிவீசிப்பிரகாசித்தீர்
குடும்பமே இன்று தவியாய்த் தவிக்கின்றதையா
ஆண்டுகள் மூன்றும் ஆகியே விட்டாலும்
ஈண்டு உமது உருவம் நெஞ்சை விட்டகலாது.

ஓம் சாந்தி!

என்றும் நினைவுடன் வாழும்:

மைதிலி நகைமாடம்,
89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:021 222 7902

- குடும்பத்தினர்
இல.197/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

# வெளிநாட்டு வதியாதோர் நாணயக்கணக்கு தேசிய சேமிப்பு வங்கியால் அறிமுகம்

வெளிநாட்டு வதியாதோர் நாணயக் கணக்கு ஒன்றை தேசிய சேமிப்பு வங்கி அறிமுகம் செய்துள்ளது.

'ரன்மசு' என அழைக்கப்படும் இக்கணக்கு கடந்த 10ஆம் திகதி வங்கியின் தலைமை அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக்கணக்கு ஆரம்பிப்பது தொடர்பாக தேசிய சேமிப்பு வங்கி, பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உங்களின் குடும்ப வங்கியான தேசிய சேமிப்பு வங்கி 'ரன்மசு' வெளிநாட்டு வதியாதோர் நாணயக் கணக்கினை 2005பெப்ரவரி 10 ஆம் திகதி வியாழக்கிழமை தலைமை அலுவலகத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள சர்வதேச பிரிவில் அறிமுகப்படுத்துவதினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த வங்கி இலங்கைப் பிரஜைகளின் 185 பில்லியன் ரூபா பெறுமதியான வைப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நாடு முழுவதும் அமைந்துள்ள 112 கிளைகள் மற்றும் ஐயாயிரம் தபால், உபதபால் நிலையங்களினூடாக இவ்வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் பல் வேறு சேமிப்புத் திட்டங்களும், கடன் வசதிகளும் இந்த வங்கியில் உள்ளன. வெளிநாடுகளில தொழில்புரியும் இலங்கையர்களின் வேண்டுகோளிற்கிணங்க அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கிலேயே இக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கணக்கிற்கு NSB 'ரன்மசு' NRFC கணக்கு என பெயரிட்டுள்ளது. தற்போது வாடிக்கையாளர்கள் அருகிலுள்ள கிளைகளில் 'ரன்மசு' NRFCகணக்கினை ஆரம்பிக்கமுடியும்.

கணக்கு ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர்களில்" செயற்படுத்தப்படுமாயினும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் இந்தக் கணக்குகளில் வைப்புச் செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்படும். கணக்கு வைப்பாளரால் கொண்டு வரப்படும் பயணிகள் காசோலைகள்/வெளிநாட்டு நாணயத் தாள்கள்/வங்கி வரைவு சர்வதேசக் காசுக்கட்டளை கொடுப்பனவுக் கட்டளை அஞ்சல்/ தந்தி/ மின்னியல் மாற்றல்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும். ஐக்கிய அமெரிக்க டொலர் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட அல்லது அதற்குச் சமமான வேறெந்த நாணயமும் ஏற்றுக்கொள்ளப்படும். வெளிநாட்டு நாணயத்திற்கும் இலங்கை சுங்கத் திணைக்களத்திடம் வெளிப்படுத்துகை செய்வதற்கான சான்று இருக்கவேண்டும்.

சுயமாகவும், கணக்கு வைப்பாளர்களிடமிருந்து எழுத்து மூல அறிவுறுத்தல்களின் பேரில் மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு மீளப் பெறல்களை மேற்கொள்ள முடியும். தேசிய, சேமிப்பு வங்கிக் கிளைகள் அல்லது வேறு வங்கியில் சொந்த கணக்குகளுக்கு, இந்த வங்கியில் அல்லது வேறு எந்தவொரு வங்கிக்கும் மூன்றாம் தரபபினருக்கு வழங்குவதற்காக ரூபாயில் பணமாற்றல்களை மேற்கொள்ள முடியும். வாடிக்கையாளர்கள் பயண ஆவணங்களைச் சமர்ப்பிப்பதனூடாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு பயணிகள் காசோலைகள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மாறவும் கூடியது. வைப்புச்செய்த, புதுப்பித்த திகதிகளில் நிலவும் சந்தை வட்டி வீதத்திற்கு அமைவாக 'ரன்மசு' NRFC நிலையான வைப்பின் வட்டி வீதம் இருக்கும். கணக்கு வைக்கப்பட்டுள்ள நாணயத்தில் வட்டி வரவு வைக்கப்படும். உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் 'ரன்மசு' NRFC கணக்குகளில் ஈட்டப்படும் வட்டிக்கு வருமான வரி விலக்களித்துள்ளார்.

வெளிநாடுகளில் வாழும், வெளிநாட்டு தொழில புரியும் இலங்கையர்கள் வெளிநாடுகளில் தொழில் புரிந்துவிட்டு நாடு திரும்பி 90 நாள்களுக்குட்பட்டுள்ள இலங்கையர்கள் 'ரன்மசு' NRFC கணக்குகளை ஆரம்பிக்க தகுதி பெற்றவர்களாவார்கள்.

"ரன்மசு" NRFC கணக்கு வைப்பாளர்கள் பின்வரும் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவற்றுக்கு மேலதிகமாகக் கவர்ச்சிகரமான வட்டிவீதங்களில் கணக்கு மீதிகளின் 90% வரையிலான ரூபாவில் கடன்கள், சகாயவட்டி வீதங்களில் புறப்படுவதற்கு முன்னரான கடன்கள் சலுகை வட்டி வீதங்களில் வீடமைப்புக் கடன்களும் சுயதேவைக் கடன்களையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

வெளிநாடு செல்வதற்கு முன்னர் கணக்கினை ஆரம்பிப்பதற்காகத் தலைமையகத்திலுள்ள சர்வதேசப் பிரிவிற்கு அல்லது அருகிலுள்ள எந்தவொரு தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்காவது சென்று கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கான படிவத்தைப்பூர்த்தி செய்து கணக்கு இலக்கம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். பணமனுப்பு தல்களுக்குத் தேவையான விவரங்களடங்கிய ரன்மசு NRFC அட்டையொன்று உங்களுக்கு வழங்கப்படும். முதல் பணம்

## கவர்ச்சியான சலுகைகள் அறிவிப்பு

சேமிப்பு, நிலையான வைப்பு, கூட்டுக் கணக்குகளை ஆரம்பிக்க முடியும். சேமிப்புக் கணக்குகளுக்கு ஆண்டிறுதியில் கணக்கின் மிகக் குறைந்த மீதி கணனியிடப்பட்டு வரவு வைக்கப்படும். பண வைப்புப் புத்தகத்திற்குப் பதிலாக, ஜூன், டிசெம்பர் மாதங்களின் இறுதியில் கணக்குக் கூற்றுக்கள் அஞ்சல் செய்யப்படும். கணக்கில் வைப்புச் செய்யப்படும் அனைத்துப் பணம் அனுப்புதல்களுக்கும், வரைவுகளுக்கும் கொடுப்பனவுக் கட்டணங்களுக்கும் கூற்றுக்கள் அஞ்சல் செய்யப்படும். தேவைப்படும்போது பணத்தினை மீளப்பெறலாம். ஆரம்ப வைப்பிற்கான குறைந்தபட்ச தொகை கிடையாது. 3,6,12 மாத காலங்களுக்கு நிலையான வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வைப்பிற்கும் ஒரு நிலையான வைப்புப் பற்றுச்சீட்டு வழங்கப்படும். முதிர்வின்போது ஈட்டப்பட்ட வட்டியுடன் சேர்த்து வைப்பை தன்னிச்சையாகப் புதுப்பிப்பதற்கு அல்லது வட்டியைக் கொடுப்பனவு செய்து முதலீட்ட வைப்பை மட்டும் புதுப்பிப்பதற்கு ஏற்பாடுகளுள்ளன. குறைந்தபட்ச வைப்புத்தொகை ஐ.அ.டொலர் 500/=ஆகும். 'ரன்மசு' NRFC சேமிப்பு கணக்குகளின் வட்டி வீதம் சந்தை வீதங்களில் தங்கிருப்பதுடன் அறிவித்தல்களின்றி

★ ரன்மசு NRFC கணக்கிற்கு முதலாவது பணமனுப்புதல் செய்யப்பட்டதும் அவர்களின் "ரட்ட இத்துரு" சேமிப்பு கணக்கொன்றிற்கு ரூபா 500/- வரவு வைக்கப்படும்.

★ ரூபாய் கணக்கிற்கு பணத்தை மாற்றுவதற்குத் தரகுக் கட்டணங்களற்ற நிலையியற் கட்டளை வசதிகள்.

★ கணக்கில் உள்ள ஒவ்வொரு ஐ.அ. டொலர் 500 இற்கும் கவர்ச்சிகரமான பரிசுகள் கிடைக்கும் வாய்ப்புடன் வருடாந்த பரிசுச் சீட்டிழுப்பு.

★ மூன்று வருடாந்த சீட்டிழுப்புக்களுக்கு தொடர்ச்சியாகத் தகைமை பெற்றவர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மெகா சீட்டிழுப்பு.

★ மாவட்ட மட்டத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிலில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற அவர்களின் பிள்ளைகள் அல்லது திருமணமாகாத வாடிக்கையாளராயின் அவரது சகோதர சகோதரிகளுக்கு ரூபா ஐயாயிரத்திற்கான நன்கொடை.

★ ரன்மசு NRFC கணக்கு வைப்பாளரின் இறப்பின் போது வங்கியின் நிபந்தனைகளுக்கு அமைவான உபகாரக் கொடுப்பனவுகள்.

அனுப்புதல் கிடைக்கப்பெற்றதன் பின்னர் கணக்கு செயற்படுத்தப்படும். ஏற்கனவே, வெளிநாடுகளில் உள்ளவர்கள் கடிதம் அல்லது தொலைபேசியினூடாக விண்ணப்பப்படிவங்களைக் கோர முடியும். தரப்படும் முகவரிக்கு படிவங்கள் அஞ்சல் செய்யப்படும். படிவங்கள் எமது இணையத் தளத்திலும் கிடைக்கும். பூர்த்திசெய்யப்பட்ட படிவத்துடன் வரைவு/ பணமனுப்புதல் கிடைக்கப்பெற்றதும், கணக்கு ஆரம்பிக்கப்பட்டு ரன்மசு NRFC அட்டை அஞ்சல் செய்யப்படும். தேசிய சேமிப்பு வங்கி கணக்கின் பெயருக்கு (கடவைச் சீட்டில் காணப்படும்) பெயர், இலக்கம் என்பவற்றுடன் வரைவு/ பணமனுப்புதல் ஒன்றைப் பெற்று வங்கியின் சர்வதேச பிரிவிற்கு அனுப்பவேண்டும். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகளை ஆரம்பிக்க முடியும்.

விவரங்களைப் பெறுவதற்கு,

தேசிய சேமிப்புவங்கி சர்வதேச பிரிவு, தளம் 2, தலைமையகக் கட்டடம், 255, காலி வீதி, கொழும்பு-3 என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி 94,11 2372184, தொலைநகல் 94 11 5359843, மின்னஞ்சல் Manager.ibu@nsb.lk என்றுள்ளது.

(3)

# இலங்கையில் வர்த்தகத்தை விஸ்தரிக்கும் 'சப்' நிறுவனம்

கணனி மென்பொருள் தயாரிக்கும் துறையில் பிரபல்யம் பெற்று விளங்கும் சப் (SAP) என்ற சர்வதேச நிறுவனம் இலங்கையில் தனது செயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்கவுள்ளது.

அடுத்த இரண்டு, மூன்று வருடங்களில் தமது வியாபாரத்தை மும்மடங்காக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என அந்த அமைப்பின் இந்தியத் துணைக்கண்டத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான அலான் செத்தி தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் வர்த்தக மாநாடு ஒன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. அதில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

வியாபார நிறுவனங்கள் தமது வளர்ச்சிக்காக இன்றைய உயர் போட்டிச் சூழலில் வளர்ச்சியை அடைவதற்காகப் புதிய மற்றும் தொழில்நுட்பங்களைத் தம்முடன் ஆலிங்கனம் செய்து கொள்கின்றன. சப் 04 மாநாட்டில் இலங்கை வர்த்தக சமூகம் காட்டிய உற்சாகமான அக்கறை குறித்து நாங்கள் பெருமிதம் அடைந்துள்ளோம்.

இந்தப் பணியில் இலங்கையின் தொழில் முயற்சிகளுக்கு சர்வதேச சந்தையில் புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டு, போட்டியிடுவதற்கு நவீன தொழில்நுட்பக் கருவிகளை உபயோகிக்க உதவும் என நாம் நம்புகின்றோம்- என்று அவர் கூறினார்.

இலங்கையில் நடைபெற்ற சப் 04 மாநாடு வர்த்தகச் சமூகத்தவரிடையே வெற்றிகரமாக நடைபெற்றதோடு, இந்த இரு நாள் நிகழ்ச்சிக்கு 250 பிரதான தகவல் உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப செயற்பாட்டாளர்கள் மற்றும் பிரிவுத்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டுக்கு கைத்தொழில் பிரத்தியேக அமர்வு, விரிவான விளக்கங்கள், செயல் விளக்கங்கள், குழுக் கலந்துரையாடல்கள் உள்ளடங்கியிருந்தன.பிரத்தியேக கைத்தொழிலுக்காக சப் தொழில்நுட்பத் தீர்வுகளைக் காண்பிப்பதற்கு மேலதிகமாகப் பாவனையாளர்களுக்கான கலந்துரையாடல்களுடன் அவர்களது வெற்றியின் உதாரணங்களை பரிமாறிக் கொள்வதற்கு பங்குபற்றியவர்களுக்கு வாய்ப்பும் கிடைத்தது.

தகவல் நிகழ்ச்சிகள், விளக்கங்கள், கலந்துரையாடல்கள் உள்ளடக்கிய பிரத்தியேகமான கைத்தொழில் அமர்வுகள் இக்கருத்தரங்கில் இடம்பெற்றன. பிரத்தியேகமான கைத்தொழில்களுக்கானத் தொழில்நுட்பத் தீர்வுகளுக்கு மேலதிகமாகப் புது முயற்சிகள் மூலம் தமது வியாபார நடவடிக்கைகளினால் வளர்ச்சி கண்டுள்ள வாடிக்கையாளர்களுடனான கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.




இந்தக் கருத்தரங்கில் சப் வாடிக்கையாளர்களான ஜோன் கீல்ஸ் நிறுவன பிரதம தகவல் அதிகாரி (CIO) லோரன்ஸ் முத்தையா, ஈகல்ஸ் காப்புறுதி கம்பனியின் நிதிக் கட்டுப்பாட்டாளர் திருமதி சன்ஜீவனி கொடகதெனிய ஆகியோரினால் எவ்வாறு சப் நிறுவனமும், அதன் தீர்வுகளும் தமது நிறுவனங்களுக்குப் புதிய முயற்சிகள் மூலம் வளர்ச்சியடைய உதவியது என்பதனை அறிவுபூர்வமான சொற்பொழிவுகள் மூலம் தெளிவுபடுத்தினர்.

சந்தையில் பெற்ற சக்தியை அடிப்படையாகக் கொண்டு அடுத்த மூன்றாண்டுகளில் தமது வியாபார நடவடிக்கைகளை மும்மடங்காக்க தலைமைத்துவத்தை மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக சப் அறிவித்தது. இலங்கையின் தொழில் முயற்சிகள் மேலும் மேலும் சமூகத்தின் சகல தரப்புக்கும் வியாபிப்பதற்காக சப் மென்பொருள் தீர்வுகளைப் பெற்றுக் கொண்டதனால் இந்த இலக்கினை அடைய முடியுமென சப் நம்புகின்றது.

புதிய துறைகளுக்குப் பிரவேசிப்பதோடு தற்போதுள்ள செங்குத்தான பிரிவுகளுக்கு மேலும் ஆழமாகப் பிரவேசிப்பதற்காகத் தமது பலமான செங்குத்துத் தீர்வுகளை மேலும் பலமாக்குவதற்கு 'சப்'பும் அவர்களது பங்குதாரர்களும் உறுதி பூண்டுள்ளனர். தற்போது சப்பும் அதன் பங்குதாரர்களும் 27 பிரத்தியேக கைத்தொழில் தீர்வுகளை இலங்கை தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்குகின்றது. இதற்குப் பிரதான செங்குத்துத் துறையான நிதிச் சேவை, உற்பத்தி, பாவனையாளர் பொருள்கள், இராணுவ மற்றும் அரசு தொடர்பான தீர்வுகளும் ஏனைய விடயங்களும் உள்ளடங்கியுள்ளன.

இலங்கையின் சில சப் பாவனையாளர்களிடையே ஜோன் கில்ஸ், ஹேமாஸ், ஹேரால்சிங்ஸ், சிலிம்லைன், லெஸர்லைன், லினே அகுவா, யுனிசெல்லா, அகுவா, சடோலைன், டெக்ஸ்டர்ட் ஜேசி, பெரிம் நிவ்லங்கா, பொடிலைன் மற்றும் ஈககிள காப்புறுதிக் கம்பனி என்பன உள்ளடங்குகின்றன.

வேகமாக வளரும் பலமான பங்குதாரர் அடிப்படை சப், பினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அதன்மூலம் சர்வதேச மட்ட மென்பொருள் தீர்வுகள் அதிகரித்து வரும் பாவனையாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. இன்று சப்பிற்கு எட்டுக்கும் மேற்பட்ட பங்குதாரர்கள் இலங்கையில் இருக்கின்றார்கள். அவர்கள் சரியான தீர்வினை வழங்குவதற்காகப் பாவனையாளர்களுடன் நெருங்கிச் செயற்படுகின்றார்கள்.

சப் நிறுவனத்தின் பலம்வாய்ந்த பங்குதாரர் வலைப்பின்னல் இலங்கைச் சந்தை குறித்துக் காணப்படும் எமது தரிசனம் மற்றும் அர்ப்பணத்தைப் பகிர்ந்துகொள்வதோடு எப்போதும் அவர்களது நிபுணத்துவ அறிவினை இலங்கைப் பாவனையாளர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் சப் நிறுவனம் தயாராக இருப்பதாகக் சப் நிறுவன இந்திய துணைக்கண்ட தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான அலன் செத்கி கூறினார்.

★



## வலி.மேற்கு கிராமசேவையாளர் பிரிவுக்குள் இடமாற்றம்

வலி.மேற்கு,பெப்.12

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் சகல கிராம அலுவலர்களும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

கிராம அலுவலர்களின் இடமாற்றம் பிரதேச செயலர் பிரிவுக்குள்ளேயே இடம்பெறவுள்ளது. (3-29-175)

## பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான கலந்துரையாடல்

சுனாமி இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் பதிவுசெய்த பல்கலைக்கழக மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9 மணிக்கு பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பேரவையில் பதிவுசெய்து உடனடி உதவிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு அடுத்த கட்டத் தொடர்ச்சியான உதவி வழங்கல் தொடர்பாக இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021 - 222 3942, 021 - 222 3768 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் கேட்டுள்ளார். (8-202)

## எழுத்துப் பரீட்சை செவ்வாய்க்கிழமை

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறிக்கு விணணப்பித்த மாணவர்களுக்கான எழுததுப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு விஞ்ஞானபீட மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவர்களில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான நேர்முகப்பரீட்சை அன்றையதினம் மு.ப. 11.30 மணிக்கும் யாழ். மாவட்ட மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை மறுநாள் புதன் காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளதாக பல்கலைககழக விஞ்ஞானபீடாதிபதி தெரிவித்துள்ளார்.(10)

# தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்கள்

தமிழீழ காவல்துறை கீழ்க்கானும் பதவிகளுக்குப் பொருத்த மானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**1.உப பரிசோதகர்**

தகைமைகள்: க.பொ.த. (உயர்தரம்) சித்தி
வயது:18-30 ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
சம்பளம்: 4500/= + 7155/= / 150/=x10+ 165/=x7 + 2700/=

**2.எழுதுவினைஞர்**

தகைமைகள்: க.பொ.த. (உயர்தரம்) சித்தி அல்லது க.பொ.த. (சாதாரணதரம்) சித்தியுடன் 5 பாடங்களில் (தமிழ் மொழி உட்பட) திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
வயது:18-30 ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம்: 4200/= + 6430/= / 125/=x10+140/=x7 + 2700/=

**3.காவலர்**

தகைமைகள்: க.பொ.த. (சாதாரணதரம்) சித்தி
வயது: 18-30 ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம்: 4200/= + 6430/= / 125/=x10+140/=x7 + 2700/=

மேற்கானும் பதவிகளில் இணையவிரும்பும் விண்ணப்பதாரர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள காவல்துறை நடுவப் பணியகத்துக்கு 10.02.2005 ஆம் திகதி முதல் 28.02.2005 ஆம் திகதி வரை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். (சி-40897)(29-14-17-26)

ஆளணிப் பிரிவு,
காவல்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்.

# Jayoda ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7620555 முதல் 7632356 வரை
சீட்டிழுப்பு இல. 108 திகதி 10-2-2005

வெற்றி எண்கள் **0 3 9 6 1 4** சுப்பர் எண் **26**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,83,54,725/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,83,54,725/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 102 | 5,000/- | 5,10,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,027 | 500/- | 5,13,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,186 | 50/- | 5,09,300/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 101,006 | 10/- | 10,10,060/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 102 | 1,000/- | 1,02,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,023 | 100/- | 1,02,300/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,092 | 20/- | 2,01,840/- |
| மொத்தம் | 123,567 | | 60,96,600/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 60,96,600/-

இந்த திங்கட்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,86,38,125/-**

தொடர் இல. 6672776 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 பெப்ரவரி 14 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7624459-6-43
7627094-6-12
7626558-5-01
7622651-1-87
7622354-4-94
7629781-9-33
7623371-1-38
7627555-4-85

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# 49 ஆம் நாள் நினைவஞ்சலி

26.12.2004 அன்று கீரிமலையில் ஏற்பட்ட ஆழிப்பேரலையாகிய சுனாமியில் அகப்பட்டு மரணமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்குகளுக்கு இன்று (12.02.2005) சனிக்கிழமை 49 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு.

**அற்புததேவன் காங்கேயன்**



சுவாமியின் படைப்பு
16-08-1982

**முத்துக்கிருஷ்ணன் அற்புததேவன்**
(மாயவர்)



சுவாமியின் படைப்பு
25-12-1951

**அற்புததேவன் யதீசன்**



சுவாமியின் படைப்பு
27-09-1986

**சுனாமியின் அழிப்பு: 26-12-2004**

ஆயிரமாய் அன்பு வைத்து
ஆசையுடன் பாசம் வைத்த எம் தந்தையையும்
நெடுங்காலம் தவமிருந்து
நாம் பெற்ற செல்வங்களை
கை நழுவப் பறித்துச் சென்றாய்
பெற்ற மனம் பதை பதைத்து
பேதலித்துத் தவித்ததனை
பேரலையே! பிசாசே! நீயறியாயோ?
'சுனாமி' என்ற பெரும் சூனியக்காரப் பேரலையே!
சூறையாடிச் சென்ற எம் செல்வங்களைத் தருவாயா?
கரைத்துக் குடித்துச் சென்ற எம் ஆருயிர்களைத் தருவாயா?

இன்று (12.02.2005) சனிக்கிழமை நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது செல்வங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்,
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

வன்னிய சிங்கம் றோட்,
தாவடி. (C-40925)

- குடும்பத்தினர்.

# பிறந்த தின நினைவுடன்...



மண்மகிழ்: 12-02-1998
கண்நெகிழ்: 26-12-2004

காலிழந்த வேளையில் நான்
கலங்கவில்லை
கண்மணிகள் நீங்கள்
எம்மருகில் இருந்ததால்
கதறி அழுகின்றோம்
கண்ணெதிரே உங்களை
கடல் கொண்டு போனதால்...

**ஜேம்ஸ் பியூட்சன்**
முல்லைத்தீவு.

நினைவுகளுடன்:
குடும்பத்தினரும், உறவினர்களும்.

(C/40923)(26)

# மரண அறிவித்தல்

## கனகரட்ணம் கணேசலிங்கம் (இராசுவர்)



யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான கனகரட்ணம் கணேசலிங்கம் அவர்கள் 10-02-2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் - அன்னம்மா தம்பதியினரது செல்வப் புதல்வனும், காலஞ்சென்ற திருமதி தனலட்சுமி, சற்குணேஸ்வரி (லண்டன்), இராஜேஸ்வரி (கொழும்பு), லோகநாதன் (France), பரமநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஜயரட்ண, பொரளை மலர்ச்சாலையில் இன்று (12-02-2005) சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (13-02-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, காலை 10.00 மணிக்குக் கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

H/¼, பம்பலப்பிட்டி தொடர்மாடி,
கொழும்பு - 04
தொலைபேசி: 011 2597588.

தகவல்:
குடும்பத்தினர்.

(41998)(26-14-17)

# நிவாரணம் வழங்கப்படாமையைக் கண்டித்து கிழக்கில் மக்கள் கொந்தளித்துப் போராட்டம்

பட்டிருப்பு,பெப்.12

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் தமக்குக் கிடைக்காமையைக்கண்டித்து கிழக்கு மாவட்டங்களின் பல இடங்களிலும் மக்கள் கொதித்தெழுந்து வீதிமறியறபோராட்டங்களில் ஈடுபடுகின்றனர். நேற்று திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இத்தகைய போராட்டங்கள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லடி, உப்போடை பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் நேற்று மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் போக்குவரத்தை நிறுத்தி மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் கோபத்தை வெளிப்படுத்தும் சுலோக அட்டைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர். "அதிகார சுனாமிகளே மக்களை வருத்தாதே", ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டும் முத்திரையா", "அரசு வழங்கும் உதவிகளை எங்களுக்கும் வழங்கு", "மீனவர்களுக்கு நிவாரணம் எங்கே" என்பன போன்ற வாசகங்கள எழுதப்பட்ட சுலோக அட்டைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

பெரும் எண்ணிக்கையான பெண்கள் தங்கள் கைக்குழந்தைகளுடன் வந்து வீதியின் குறுக்கே அமர்ந்திருந்து - கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் - போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு வந்த காத்தான்குடிப் பொலிஸார், மக்களைக் கலைந்து செல்லுமாறு கேட்டனர். ஆனால் பிரதேச செயலர் அந்த இடத்திற்கு வந்து தமக்கு நிவாரணம் வழங்க உறுதியளித்தால் மட்டுமே தாம் கலைந்து செல்ல முடியும் என்று தெரிவித்தனர். போராட்டம் தொடர்ந்தும் இடம்பெற்றது.

இதனால், மட்டக்களப்பு, கல்முனைப் பகுதிகளுக்கான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

இதேவேளை, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் உரிய முறையில் வழங்கப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை நகரத்தை அண்டிய திருக்கடலூர், விஜிதபுரம், மக்களும் நேற்று ஏகாம்பரம் வீதியில் போக்குவரத்துக்களை நிறுத்தி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். நூற்றுக்கணக்கான மீனவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதனால் திருகோணமலை நகரத்தில் இருந்து குச்சவெளி, கும்புறுப்பிட்டி, நிலாவெளி, சாம்பல் தீவு பகுதிக்களுக்கான போக்குவரத்து மதியம்வரை துண்டிக்கப்பட்டிருந்தது.

(த-க)

## புலிகளின் இணக்கத்துடன்தான் வடக்கு - கிழக்கில் நிவாரணப் பணி

### அரசின் முடிவில் மாற்றமில்லை என்கிறார் மங்கள

கொழும்பு, பெப்.12

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் - குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் - புலிகளின் இணக்கப்பாட்டுடன் பொதுக்கட்டமைப்பின் மூலமே நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்படும். எக்காரணம் கொண்டும் புலிகள் ஓரங்கட்டப்படமாட்டார்கள். புலிகளின் ஒத்துழைப்பின்றி அப்பிரதேசங்களில் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியாது. இதுதான் அரசின் நிலைப்பாடு. இதில் எந்த மாற்றமும் இல்லை.

-இப்படி அடித்துக்கூறுகின்றார். அமைச்சரவைப் பேச்சாளரான மங்கள சமரவீர. இவ் விடயம் தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்தும் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. 80 வீதமான விடயங்களில் பொதுவான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. சில சிக்கலான, சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பாக இருதரப்பிலும் விரிவாக ஆராயப்பட்டு வருகின்றது. கூடிய விரைவில் புலிகளின் இணக்கப்பாட்டுடன் பொதுக் கட்டமைப்பின் கீழ் நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் மங்கள சமரவீர கூறினார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில், பாதிக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலைகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு நோர்வே, ஜேர்மன், கனடா போன்ற நாடுகள் முன்வந்துள்ளன.

அதேவேளை, ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் வடக்கில் பெரிதும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலாளர் அலுவலகங்களை மீளக்கட்டியெழுப்ப அரசு நிதி ஒதுங்கியுள்ளது.

அதேபோன்று, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைக் கட்டடங்களை புனரமைப்பதற்கும் அரசு நிதி ஒதுககியுள்ளது. நேற்று முன்தினம் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரமும் கிடைத்துள்ளது - என்று மங்கள சமரவீர மேலும் கூறினார். (த-க)

## திருடர்களின் கைவரிசை நீர்வேலியில் அதிகரிப்பு

அரியாலை,பெப்.12

நீர்வேலிப் பகுதியில் திருடர்களின் கைவரிசை தற்போது அதிகரித்திருப்பதாகப் பொது மக்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இரவு நேரங்களிலேயே திருடர்கள் இப்பகுதியில் கூடுதலாக நடமாடுகின்றனர் எனவும் சில வீடுகளில் பொருள்களைச் சூறையாடிசென்றிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-17)

## 86 அதிகப்படியான வாக்குகளால் அவசர காலச்சட்டம் நிறைவேறியது

அவசரகாலச் சட்டம் 86 அதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

தமிழர் கூட்டமைப்பின் 18 எம்.பிக்கள், ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட எம்.பியான தி. மகேஸ்வரன், மலையக மக்கள் முன்னணி எம்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் எதிராக வாக்களித்தனர். ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு பிக்கு எம்.பிக்கள் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். அக்கட்சியின் ஏனைய எம்.பிக்கள் வாக்களிப்பு நடைபெற்றபோது சபையில் இருக்கவில்லை. அரசுக்கு ஆதரவாக 106 வாக்குகளும் எதிராக 20 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஐ.தே.கட்சி வாக்கெடுப்பை புறக்கணித்தது. நாடாளுமன்றம் இம் மாதம் 22 ஆம திகதி மீண்டும் கூடும். (த-க)

## ஒத்திவைப்பு

சமூக அபிவிருத்தி மன்றத்தினால் இன்று சனிக்கிழமை நடத்த ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் இக்கருத்தரங்கு முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-12)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப், 12

இலங்கை திறந்த பல்கலைக்கழக சமூக விஞ்ஞானங்கள் பீடமாணவர் பேரவையினால் யாழ். பிராந்திய நிலையத்தில் இன்றும் நாளையும் நடந்த ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த தலைமைத்துவப் பயிற்சிப்நெறி தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று சனிக்கிழமை நடை பெறாது எனத் தெரிவிக்கபட்டது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேரப்படி நாளை ஞாயிற்றுக்கிழமை பயிற்சி நடைபெறும் என சமூக விஞ்ஞானங்கள் பீட செயலாளர் தெரிவித்தார். (3-12)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.திருமறைக்கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் இன்று மாலை 4.45 மணிக்கு நடைபெறவிருந்த கவிஞர் மு.புஸ்பராஜனின் "மீண்டும் வரும் நாள்கள்" கவிதை நூல்வெளியீட்டு நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை வழமையான ஏற்பாடுகளுடன் இந்நிகழ்வு நடைபெறும் என விழா ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (3-12)

## பரிசளிப்பு விழா இன்று நடக்கும

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழா நிறைவையொட்டி வருடாந்த பரிசளிப்பு விழா திட்ட மிட்டபடி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம பரிதியும் கலந்து கொள்வர். (த-12)

## எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்வுகள்

குடத்தனை,பெப்12

சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளனமும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து சுனாமி இயற்கையனர்த்தத்தால் இடம்பெயர்ந்து வடமராட்சி நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தவுள்ளனர். (8-78-202)

## பிற்போடப்படுகின்றது

இன்று (12.02.2005) சனிக்கிழமை நடைபெறவிருந்த சி. வித்தியாதரனின் சதுரங்கத்தில் இறுதியாட்டம் நூல் வெளியீடு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஹரிகஸ்பரோவ்
சதுரங்க அக்கடமி.

(42006)

## புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தை மாதம் 30 ஆம் நாள் இன்று (12.02.2005) சனிக்கிழமை மு.ப.11.15 மணி முதல் 12.05 மணிவரையுள்ள சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

## லிங்கம் அழகு மாடம்

என்னும் புதிய கிளை ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவுள்ளதால் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

603. கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

லிங்கம் ஸ்ரோர்,
இ.நவநீதகாந்தன்
(சந்திரன்).

(42005)(43-11-45)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்

பரமானந்தர் சிவசுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/கோண்டாவில்,
இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர் சங்கம்.

(42010)(43-11-45)

## முக்கிய அறிவித்தல்

நாளை (13.02.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற இருந்த சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான ஒன்றுகூடல் அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறும். சகல அங்கத்தவர்களும், பொறுப்பாசிரியர்களும் தவறாது சமுகமளிக்கவும்.

தொடர்பிற்குரிய தொலைபேசி
இல. 222 3166

மாவட்ட ஆணையாளர்,
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்,
யாழ்.தெற்குப்பிரதேசம்.

(42011)(43-11-45)

## அற்புத நிபுணனே! அடைக நீ சாந்தி!





முத்துக்கிருஸ்ணன் அற்புததேவன் | அற்புததேவன் காங்கேசன் | அற்புததேவன் யதீசன்

அற்புததேவன்...
அச்சு இயந்திரப் பொறியியலில் நீ ஓர் அற்புத நிபுணன்...
உன் கரங்கள் தொட்டுத்துலங்காத எந்திரங்கள் எதுவுமே இல்லை
உதயனின் நாளாந்தப் பிரசவத்தில் உனது வியர்வையும் செயல்வினையும் சேர்ந்தன...
கைகளால் சைகை காட்டி நள்ளிரவுதாண்டி நீ விடைபெறும் போது அச்சு இயந்திரங்கள்
அமைதியாய் இயங்கிக்கொண்டிருக்குமே!
அத்துணை மாயம் எப்படிச் செய்தனை என்று எத்தனையோ தடவை
உம்மிடம் கேட்டதுண்டு...
அப்படிப் பார்த்தால் மாயவன் என்ற பெயர் பல்லாயிரம் தடவைகள் உனக்குப் பொருத்தம்.
உன்வழி தொடர்வர் என்ற நம்பிக்கையை விதைத்த உன் மைந்தர்களும் இங்கில்லை.
தேசத்தை உலுக்கிய பெருந்துயரில் எம் நேசத்துக்குரிய உங்களையும் இழந்தோம்
உன் நிபுணத்துவம் நிரப்பமுடியாத பெரும் வெற்றிடமே, எங்கள் நேசத்துக்குரிய மாயவனே!
அச்சு இயந்திரங்கள் அழுகின்றன...
அவற்றோடு சேர்ந்து எங்கள் நினைவுகளில் உந்தன் ஞாபகங்களும் கனக்கின்றன...!
அற்புதா! உன் திறமை அற்புதமானது... அசாதாரணமானது
அடுத்த தலைமுறையால் அது முன்னுதாரணமாய் நினைக்கப்படும்
அடைக உங்கள் ஆத்மாக்கள்
ஆண்டவன் காலடியில் அமைதியை!

என்றும் நினைந்துருகும்

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-40928)

உதயன் நிர்வாகத்தினரும்
பணியாளர்களும்.

## நெஞ்சகலாத நினைவு அஞ்சலி

7ஆம் ஆண்டில்



அமரர்
சின்னப்பு
வல்லிபுரம்

தோற்றம்: 02.05.1912
மறைவு: 03.02.1998

திதி:
2005 – 02 – 12

4ஆம் ஆண்டில்



அமரர்
வல்லிபுரம்
மாணிக்கலிங்கம்

தோற்றம்:09.06.1946
மறைவு:28.01.2001

என்றும் எம் நினைவில் நீங்காத அன்புத் தெய்வங்களே!
உங் கள் ஆசியும் வழிகாட்டலும் என்றும் எங்களுக்குத் துணையாக இருக்கட்டும்.

மா. குமரேஷ்,
566/3, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(42003)(43-11-45)

– குடும்பத்தினர்.

# வன்னியில் கண்டன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை முதல் கிளிநொச்சி, தர்ம புரம், பளை, முழங்காவில், பரந்தன், அக்கரா யன், வட்டக்கச்சி ஆகிய பகுதிகளில் கண்டனப் பேரணிகளும் கண்டனக் கூட்டங்களும் நேற்று இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளை ஒட்டி அந்தப் பகுதி களில் உள்ள வர்த்தக நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் மூடப்பட்டு, மக்கள் நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

நண்பகலுக்குப் பின்னரே அவைகள் மீளத் திறக்கப்பட்டன.

தருமபுரத்தில்

தருமபுரம் அ.த.க.பாடசாலையில் இருந்து கௌசல்யன், நாட்டுப் பற்றாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந் திரநேருவினதும் மற்றும் போராளிகளினதும் திருவுருவப் படங்கள் அலங்கரிக்கப்பட்ட ஊர்தி யில் தருமபுரம் ம.வி. மாணவிகளின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் ஊர்வலமாக தரும புரம் ம.விக்கு எடுத்துவரப்பட்டு நினைவஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

பொதுச் சுடரினை விசுவமடுக் காவல்துறைப் பொறுப்பாளர் இரகுராம் ஏற்றிவைத்தார். தேசி யக் கொடியினை விசுவமடுப் பிரதேச அரசி யல்துறைப் பொறுப்பாளர் றூபன் ஏற்றிவைத் தார். மாவீரர்களுக்கான சுடர்களினை விசுவமடு தென் இந்திய திருச்சபை பங்குத்தந்தை பி.தேவ ராஜா, புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய குருக்கள் சிவலோகநாத குருக்கள், பாட சாலை அதிபர் புலோகராசா, விசுவமடு வர்த் தகசங்கத் தலைவர் ஞானம், தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் மற்றும் கிளி. பெண்கள் மேம்பாட்டுக் குழுத் தலைவி திருமதி காசி நாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து நினைவுரைகளினை சிவலோக நாதக் குருக்கள், அரசியல்துறைப் பொறுப்பா ளர் றூபன், கோட்டக் கல்வி அதிகாரி ஆகியோர் நிகழ்த்தினர்.

வட்டக்கச்சியில்

வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச.பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ காவல்துறையின் வட்டக் கச்சிப் பணிமனைப் பொறுப்பாளர் கி.கிங்ஸ்லி தாஸ் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடி யினை வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றிவைத்தார்.

லெப். கேணல் கௌசல்யனின் திருவுரு வப் படத்திற்கு ஈகச்சுடரினை இரண்டு மாவீரர் களின் தந்தையான கந்தசாமி ஏற்றி வைக்க மலர் மாலையை கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவன நிர்வாக அலுவலர் புஸ்பமாலா அணி வித்தார். மேஜர் புகழவனின் திருவுருவப்படத் திற்கு இராமநாதபுரம் தேசிய எழுச்சிப் பேர வைச் செயலாளர் ராணி ஈகச்சுடர் ஏற்றி வைக்க, வைத்தியர் சித்திரா பரமேஸ்வரன் மலர் மாலை அணிவித்தார்.

மேஜர் புகழவனின் திருவுருவப்படத்திற்கு இராமநாதபுரம் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ராணி ஈகச்சுடர் ஏற்றிவைக்க, வைத்தியர் சித்திரா பரமேஸ்வரன் மலர்மாலை அணிவித்தார்.

2ஆம் லெப். விதிமாறனின் திருவுருவப்படத் திற்கு வட்டக்கச்சி வர்த்தக சங்கப் பொருளாளர் மகேஸ்வரன் ஈகச்சுடர் ஏற்ற, அரசியல்துறை யைச் சேர்ந்த இராமஜெயன் மலர்மாலை அணிவித்தார். நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு வின் திருவுருவப்படத்திற்கு இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ச.புண்ணியமூர்த்தி ஈகச்சுடர் ஏற்ற வரு வாய்ப் பகுதியைச் சேர்ந்த காண்டீபன் மலர் மாலை அணிவித்தார். பின்னர் மலர் வணக் கம் இடம்பெற்றது. தொடர்ந்து தலைமை யுரை யினையடுத்து இராமநாதபுரம் மகாவித்தியா லய அதிபர் க.இரத்தினகுமார், வட் டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழ நிலவன் ஆகியோர் நினைவுரை களை நிகழ்த் தினர். இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொது நிறுவனங் களைச் சேர்ந்தோர், வர்த்தகர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

(3-405-402)

# தமிழ்ச்செல்வன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் அரச - எதிர்க்கட்சி, அரசியல் கட்சிப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இன்று காலை மட்டக் களப்புக்கு விசேட ஹெலிமூலம் வருகைதரவுள்ள அவர், அங்கிருந்து தரைமார்க்கமாக விடு தலைப் புலிகளின் கொக்கட்டிச் சோலை பிராந் திய அரசியல்துறைப் பணிமனைக்குச் சென்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்த வுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மறைவின் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலைகள், சமா தானப் பேச்சுக்களின் எதிர்காலம் மற்றும் ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மீள்கட்டுமானப் பணி கள் ஆகியன தொடர்பாக இன்றைய பேச்சுக் களில் விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. இதேவேளை, கொழும்பில் தங்கியி ருந்த புலிகளின் சமாதானச் செயலகப் பணிப் பாளர் புலித்தேவன், இந்தப்பேச்சில் கலந்து கொள்வதற்காக நேற்றுக்காலை மட்டக்களப்புக் குப் பயணமானார். போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் வழித்துணையுடன் பொலீஸ் பாதுகாப்பும் இந்தப் பயணத்தின்போது அவருக்கு வழங் கப்பட்டது. (த-க)

# கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தைக் கண்டித்து ஜனாதிபதிக்கு மகஜர் கையளிப்பது என்றும் - கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் முடிவுசெய் துள்ளது. இந்தப் பேரணியில் பொது அமைப்புக் களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொள்வர். (3-402)

# இன்று ஹர்த்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் சிற்றூர்திகள் உட்பட போக்கு வரத் துச் சேவைகள் எவையும் இன்று இடம்பெறாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரச மற்றும் தனியார் துறை, கூட்டுறவுத் துறை ஊழியர்கள் எவரும் தங்களது கடமை களுக்குச் செல்லாமல் ஹர்த்தாலுக்கு ஒத்து ழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ள னர். இதேவேளை, யாழ்ப்பாணத்துக்கும்கொழும் புக்கும் இடையிலான தனியார் விமான சேவை களும் இன்று இடம்பெறமாட்டா என்றும் தெரி விக்கப்பட்டது. (த-12-17-11-139-173)

# சந்திரநேருவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று சனிக்கிழமை காலை, தம்பிலுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கும் இரங்கல் கூட்ட மண்டபத்திற்கு, சந்திரநேரு வின் பூதவுடல் கொண்டுவரப்படும்.

காலையில் டாக்டர் அ.தமிழ்நேசன் தலை மையில் பொதுவான இரங்கலுரைக் கூட்டம் நடைபெறும். தமிழ்க் கிராமங்களிலிருந்து வரும் முக்கிய பிரமுகர்கள் இரங்கலுரை நிகழ்த்துவர்.

பகல் 12 மணியளவில் பூதவுடல் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படும். பின்னர் பாவட் டாக்குளம் சந்திப்பக்கத்தில் இரங்கல் கூட்டம் நடைபெறும். அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், மூத்த உறுப்பினர் வே.பாலகுமார், மட்டு. - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு, மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, தளபதி கேணல் ரமேஷ் உட்படப் பலர் இரங்கலுரையாற்றுவர்.

மாலை 3 மணியளவில் திருக்கோயில் மெதடிஸ்த தேவாலயத்தில் போதகர் இரா சையா தயாநிதியின் பிரார்த்தனையுடன் இறுதி அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். பின்னர் 5.30 மணியளவில் காஞ்சிரன்குடா படுகொலைச் சம்பவத்தில் உயிர்நீத்தோர் அடக்கம் செய் யப்பட்ட மாணிக்கப்பிள்ளையாராலய முன்றி லிலுள்ள நாட்டுப்பற்றாளர் துயிலும் இல்லத்தில் சந்திரநேருவின் பூதவுடல் நல்லடக்கம் செய் யப்படும் என ஏற்பாட்டாளர் எஸ்.உதயகுமார் தெரிவித்தார். (த-க)

# கூட்டமைப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் அகாஷிக்கு விளக்கினர் என்று தெரி விக்கப்பட்டது. கடந்த திங்கட்கிழமை புனாணை யில் இராணுவக் காவலரண்களுக்குச் சமீபமாக லெப்டினன்ட் கேணல் கௌசல்யன் உட்பட 4 புலிகள் சுட்டுக்கொலப்பட்ட சம்பவம் தொடர் பாகவும் கூட்டமைப்பினர் அரசு மற்றும் இரா ணுவத்தினர் மீதான தமது ஆட்சேபனையை அகாஷிக்குச் சுட்டிக் காட்டினர் என்றும் கூறப்பட்டது. (த)

# கண்டனப் பேரணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது கண்டனப் பேரணியை எதிர் வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நடத்தவுள்ளன. அன்று காலை 10 மணிக்கு யாழ். முத்திரைச்சந்திப் பகுதியிலுள்ள கிட்டுப் பூங்காவில் அணிதிரளும் கூட்டுறவாளர்கள் பேரணியாகப் புறப்படுவர். அங்கு ஆரம்பமா கும் கண்டனப் பேரணி கோயில் வீதியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தைச் சென்றடையும்.

அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் பிரதிநிதிகளிடம் மகஜர் கையளிக்கப்படும்.

கண்டனப் பேரணியில் செல்வோர் பல் வேறு சுலோக அட்டைகளையும் தாங்கிச் செல் வர். இதில் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த வர்கள் கலந்துகொள்வர். இதேபோன்று ஏனைய தொழிற் சங்கங்களும் இரு கோரிக்கைகளை முன்வைத்து கண்டனப் பேரணிகளை நடத்த வுள்ளன.

இதேவேளை -

நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ். மாவட்டத்திலுள்ள முச்சக்கரவண்டிச் சங்கம், மோட்டார் கார்ச் சங்கம், தனியார் மினிபஸ் சங்கம் என்பன இணைந்து வாகனங்களில் பேரணியாகச் சென்று போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் மகஜர்களைக் கையளிக்கவுள்ளன.

வாகனச் சாரதிகள், நடத்துநர்கள், பொது மக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் வாகனங்களில் சென்று இந்த மகஜரைக் கைய ளிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# விவேகத்துடனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு யுத்தம் வெடிக்கவேண்டும் - நாட்டில் அமைதி குலையவேண்டும் எனத் திட்டமிடும் ஒரு குழுவினரே இப்படுகொலைகளைச் செய் துள்ளனர். இது ஓர் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும் எனவும் அமைச்சர் கூறினார்.

அரசும் புலிகளும்தான் யுத்தநிறுத்த உடன் படிக்கையைச் செய்துகொண்டுள்ளனர். இங்கே புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். இப்படியான ஒரு சூழலில் உடன்படிக்கையை மீறியது புலி களா? அரசா? - என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அரசும் புலிகளும் இணைந்து மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளை விரும்பாத ஒரு பிரிவினரே இந்த மனிதாபிமா னமற்ற, ஈனத்தனமான செயலைப் புரிந்துள்ள னர். இது தொடர்பாக தீவிர புலன்விசாரணை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அமைச்சர் பட்டும்படாமலும் பதிலளித்தார்.

முற்றுமுழுதாக அரச படைகளின் கட்டுப் பாட்டிலுள்ள பிரதேசத்திலேயே இப்படுகொலை கள் இடம்பெற்றுள்ளன. நிராயுதபாணிகளாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த புலிகளின் உறுப்பினர்களே கொலைசெய்யப் பட்டுள்ளனர். இதனால் யுத்தநிறுத்த உடன் படிக்கை முறிவடையுமா? யுத்தம் ஒன்று வெடிக்குமா? - என்றும் நிருபர்கள் கேட்டனர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நிச்சயமாக முறி வடையாது. இப்படியான நிலையில் மிகவும் பொறுப்புணர்வுடன் புலிகள் பொறுமையைக் கடைப்பிடித்துள்ளனர் - புலிகளின் நேர்மையும், நிதானமும் பாராட்டத்தக்கவை - என அமைச் சர் மங்கள சமரவீர பதிலளித்தார். (த-க)

# பொலீஸாரால் இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு நேற்று இடம்பெற்ற சம்பவங்கள் பற்றிக் கூறப்படுவதாவது:-

தாழ்வுபாடு பகுதியில் கிணறு ஒன்றில் குளித் துக்கொண்டிருந்த பொலீஸ்காரர் ஒருவர், அவ் வழியில் போன யாழ்ப்பாணத்துத் தமிழ் இளைஞரான ஜூலி (வயது-17) என்பவரைத் தம்மை நெருங்கி வருமாறு அழைத்துள்ளார்.

அதற்கு அந்த இளைஞர் மறுக்கவே, பொலீ ஸார் அந்த இளைஞரை நோக்கி தேங்காய்க் கோம்பையால் எறிந்தார் எனக் கூறப்படுகி றது. கோம்பை தாக்கியதில் அந்த இளைஞர் மயங்கிச் சரிந்தார். மயங்கிக் கிடந்த இளை ஞரை நெருங்கிய பொலீஸ்காரர், அவரைத் தாக்கினார் என்று கூறப்பட்டது. அவரது ஆணு றுப்பு மற்றும் உடலில் பல பாகங்களில் இரத் தக் காயங்கள் காணப்பட்டன எனவும் தெரிவிக் கப்பட்டது. படுகாயங்களுக்குள்ளான இளைஞர் பின்னர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இந்த இளைஞரது குடும்பம் நீண்ட காலமாக தாழ்வுபாட்டில் வாழ்ந்துவருகின்றது. எனினும், இளைஞர் யாழ்ப்பாணத்தில் தங்கி யிருந்து ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கற்றுவருகி றார். விடுமுறைக்காக மன்னாருக்கு வந்திருந்த சமயம் இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்தே அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது. விவகாரத்தைக் கேள் விப்பட்டு ஒன்று திரண்ட அப்பகுதியில் வாழும் ஐந்நூறு குடும்பங்களும் பொலீஸாருக்கு எதி ராகப் போராட்டத்தில் ஈடுபட்டன.

பொலீஸ் நிலை யத்துக்கு முன்பாக அமைந்திருந்த காவல்நிலை ஒன்றை யும் பொலீஸார் குளிக் கப் பயன்படுத்தும் கிணற்றைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த மறைப்புக்களையும் தீ வைத்துக் கொளுத் தினர். பொலீஸ் நிலை யம் செல்லும் பாதை யிலும் ரயர்களைப் போட்டு எரித்துப் பெரும் ஆர்ப்பாட்டங் களில் ஈடுபட்டனர்.

இந்தப் பாதகச் செயலில் ஈடுபட்ட பொலீஸ் காரருக்கு எதிராகக் கடும் நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவரைத் தமக்குக் காண்பிக்கவேண்டும் என் றும் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் வலி யுறுத்தினர்.

நேற்றுமாலை, இவ்விவகாரத்தை அறிந்து 2 டிராக்டர் மற்றும் 5 ஜீப்புகளில் மன்னாரி லிருந்து பொலீஸார் தாழ்வுபாடு பொலீஸ் நிலையத்தை நோக்கிச் சென்றனர்.

வழியில் பாதையை மறித்து ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்ட பொதுமக்களுக்கும், அவர்களுக் கும் இடையில் முரண்பாடு வெடித்து குழப்பம் ஏற்பட்டது. திரண்டிருந்த பொதுமக்களைக் கலைக்க பொலீஸார் கண்ணீர்ப்புகைக் குண்டு களை வீசி, குண்டாந்தடியடிப் பிரயோகம் செய்தனர். அதில் பொதுமக்கள் பலர் காயம டைந்தனர்.

நேற்று மாலை 6.30 மணியளவில் பொலீ ஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் அங்குள்ள தேவாலயம் ஒன்றில், பிரச்சினைக் குத் தீர்வுகாணும் நோக்கிலான சந்திப்பு இடம்பெற்றது. அப்பகுதி மதகுரு தலைமை யில் இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனி னும், நேற்றிரவு வரை அங்கு தொடர்ந்தும் பதற்றம் நிலவியது. (த-க)

# கௌசல்யனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் மட்டு. - அம்பாறை தலைமைச் செய லகப் பொறுப்பாளராக பதவிவகித்தவர். இப் போது அரசியல்துறைப் பொறுப்பாளராக மாற் றப்பட்டுள்ளார். இவர் 1986ஆம் ஆண்டு புலி கள் அமைப்பில் இணைந்துகொண்டவர் என் பதும் குறிப்பிடத்தக்கது. (த-க)


PSORIASIS

சரும படைநோய்

இந்நோய்க்கான காரணம் இதுவரை காலமும் அறியப் படாமல் இருந்தபோதிலும் ஒருவித நுண்கிருமியினால் ஏற் படுவதாகவே நாம் கருதுகின்றோம், இதை நாம் உறுதி யாகக் கூறுவதற்கு, எமது ஆயுர்வேத மருந்து இந்நோய் விடயத்தில் முனைப்பாக செயல்படுவதே காரணம்.

தொடர்புகளுக்கு:

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOL APPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org (ச-40912) (14-17-29)

CHEMISTRY Group Class
By: DIAS
• GENERAL
• ORGANIC
• INORGANIC
நாவலர், ஆனைப்பந்தி, யாழ்நகர்.

UNIT
கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
PIII கணனிகள் 27,000/- முதல்
3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்
Intel 2.4 கணனிகள் புதிய DELL மொனிட்டருடன் 47,900/- முதல்
சகல கணனி உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில்
Possible which impossible
347, K.K.S. Road
Manohara Theatre Junction,
Jaffna.


# மரண அறிவித்தல்கள்

## விஸ்வநாதன் சிவானந்தராசா

(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)



டச்சு றோட், அளவெட்டி மேற்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வ நாதன் சிவானந்தராசா அவர்கள் நேற்று (11.02.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (14.02.2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் என் பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை ருக்கும் அறியத்தருகின்றோம்.

டச்சுறோட், அளவெட்டி மேற்கு.
T.P.: 0776054089 (42014)(30)

தகவல்:
குடும்பத்தினர்.

## சிவகாமியம்மை சபாரத்தினம்

இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், ஜி.2/1, டயஸ் பிளேஸ் குணசிங்கபுர, கொழும்பு-12 வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமியம்மை - சபாரத்தினம் அவர்கள் நேற்று (11.02.2005) வெள்ளிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா சபாரத்தினத்தின் அன்பு மனைவியும், கேசவமூர்த்தி (கனடா), தனலட்சுமி (ஆசிரியை, கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) காலஞ்சென்ற சாந்தலட்சுமி (கனடா), அன்பழகன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், மோகனாம்பாள் (கனடா), இராஜதிலகம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன தொழில் நுட்பவியலாளர்), சண்முகராஜா (கனடா), மாதினி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும், தாரிணி, அர விந்தன், பாமினி, சியாமளன், கோகுல், கேசிகா, சரண்யன், யூஜீதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் காலஞ்சென்ற சரவணமுத்து, நாகம்மா (ஹட்டன்), காலஞ்சென்ற கதிரவேலு காலஞ்சென்ற அன்னபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவ ரம் பின்னர் அறி விக்கப்படும்.

G2/1, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு-12
தொ.பே: 2332406 (சி-40930)(30)

தகவல்:
எஸ்.இராஜதிலகம்
(மருமகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.